Approved for the Training Schools.

Prahalatha

REVISED EDITION

1059
3.17
REGISTRAR OF BOOKS
17 SEP 1917
MADRAS.

By

Sathavathanam

T. Krishnaswamy Pavalar.

0-,2 MKS 4/P.
N17
12514C

V. Kannan and Co.,
Chintadripet, Madras.

பிரகலாதன்.

ஒரு தமிழ் நாடகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 SEP 1917
MADRAS.

சதாவதானம்

தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்

அவர்கள் எழுதியது.

சென்னை

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி


வெளியிட்டது.

திருத்தமான இரண்டாம்பதிப்பு.


1917.

விலை அணா 8.]

[சர்வ சுதந்தரம் பெற்றது.



PRINTED AT THE
Sacchithanantha Press,
Komaleesvaranpet, Madras.



B.

TO

A. P. Allimuthu Nadar Esq:

Proprietor

Messrs: A. P. Perumal

Nadar and Sons, Madura.

THIS BOOK IS

Respectfully dedicated

In token of his love

for the Tamil & the Tamilians.

முகவுரை.

தெருக்கூத்தாடும் கூட்டத்தார், ஒரு தினம் இந் நாடகத்தினை நடிக்க யான் கண்டதே, யான் இதனை எழுதுதற்குக் காரணமாய் இருந்தது. இதில், இடை யிடையே யானியற்றிய பாக்களைக்கே யன்றி, ஆன் றோர் செய்யுட்களையும் உடன் சேர்த்திருக்கிறேன். யானியற்றிய பாக்களுள் சில, தெலுங்கில் சிசபத்தி யம் என்று சொல்லும் பாவின் சந்தத்திற்கேற்ப அமைந்துள்ளன. ஆதலின், அவற்றைப் பாடுவோர் அவ்விசையுடன் பாடுதல் நலம். இதனையும் மற்று முள்ள எனது நாடகங்களையும் நடித்துக்காட்ட விரும்பும் நாடகசங்கத்தினர், தாம் நடிப்பதற்குமுன் எனக்குத்தெரிவித்துக்கொள்ளும் பழக்கத்தில் மாறு திருக்கவேண்டுகிறேன்.

எ. 5. உலகப்பமேஸ்திரி வீதி
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
15th November 1915.

ஆசிரியன்.

உ

பிரகலாதன்.

நாடக பாத்திரங்கள்.

மஹாவிஷ்ணு நரசிம்மமூர்த்தி	... இரக்ஷக தெய்வம்
பிரமன்	... சிருஷ்டிக் கடவுள்
தேவேந்திரன்	... தேவர் தலைவன்
நாரதர்	... ஓர் தேவ இருடி
இரணியன்	... ஓர் அசுராராஜன்
பிரகலாதன்	... இரணியன் மகன்
சண்டன் அமர்க்கன்	... உபாத்தியாயர்கள்
சுக்கிராச்சாரி	... அசுர குரு
லக்ஷ்மி	... விஷ்ணுவின் மனைவி
லீலாவதி	... இரணியன் மனைவி

இந்திரன் ஒழிந்த திக்குப்பாலகர், இராக்ஷதர், பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள், கொலைஞர், பாகன், பிடாரன் முதலானோர்.

கதை நிகழிடம்.

பாற்கடல், தேவலோகம், மாயாபுரியும்,
அதை அடுத்த காடும்.

பிரகலாதன்.

முதலங்கம் - முதற்காட்சி.

களம்: இரணியகசிபின் அரசவை - காலம்: பிற்பகல்.

[மந்திரி, பிரதானிகள் வீற்றிருக்கின்றனர். இரணியன் வருகிறான். எல்லோரும் எழுந்து, "தேவ தேவ இரணிய தேவாய நமஃ" என்று வணங்குகின்றனர். இரணியன் சிம்மாதனத்தேறி நிற்கிறான்]

இரணியன்:—

விருத்தம்.

ஆதியாய் நடுவு மாகி அந்தமாய் அவையப் பாலாய்ச்
சோதியாய் நிறைவ தாகிச் சுழொளி விளக்க மாகி
பேதியா நின்ற ஒன்றுப் பெரியதாய்ச் சிறிய தாகி
வாதியா உற்ற ஒன்றன் மலரடி வணங்கி னேனே.

[தன் ஆதனத் தமர்கின்றான்.]

எல்லோரும்:—தேவ தேவ இரணிய தேவாய நம!

இரணியன்:—சபாஷ்! அண்டபகிரண்ட பிரமாண்டங்டங்கள் எல்லாம், நடுக்கங்கொள்ள அடக்கியாளும் ஆரவார தீரசூர வீரனும் என்னைப் பணிந்திடும் ஏ, சபையோர்காள்! அமர்வீர் உங்கள் ஆதனத்தில்.

[எல்லோரும் உட்காருகிறார்கள்.]

சபாஷ்!—மந்திரிகாள், எங்கே அந்த அற்பப் பேயனும் மாயனைத் தேடிச்சென்ற என் தம்பி இரண்யாக்ஷன்? கேவலம் மசகத்திற்குச் சம

மான அந்தக் கேசவனுடன் இன்னுமோ வாது செய்கின்றான் ?

[திவமூர்த்தன் ஓடிவருகின்றான்.]

திவமூர்த்தா ? மடிந்தனனோ அம்மாயன் ?

திவ:—இரண்யேசா, என்ன சொல்லப்போகின்றேன் நான் ! அந்த அரியைக்காண நாங்கள் செய்த பிரயத்தனங்களெல்லாம் வீணாய்ப்போயின ! எதிரே நின்று போர்புரிய சக்தியற்ற அந்தக் கேசவன் செய்யும் மாயங்களால் நாங்கள் மாளாமல் வந்ததே எங்கள் பாக்கியமாகும்.

இர:—ஆஹா ! (கீழிரங்கி) திவமூர்த்தா என்ன சொல்லினை ? அஃதிருக்கட்டும், எங்கே என் தம்பி இரண்யாக்ஷதன் ?

திவ:—இரண்யபூபா ! அவர் எப்படியாயினும் அரியைக் கொல்லாது விடுவதில்லையென்று அவனைத் தேடித் திரிகின்றார். நாங்களும் பின்பற்றிச் சென்ற போது, அம்மாயனின் மாயம் எங்களை முன் செல்லவொட்டாமல், தடைசெய்தது. என்றாலும் நாங்கள் மேற்செல்ல எவ்வளவோ முயன்றோம்.

இர:—பிறகு ? உங்களால் முடியாததால், ஓடிவந்தீர்களோ?

திவ:—ஆம், பிரபு.

இர:—ஆம் ! ஆம் ! அடே! என்னெதிரில் சற்றேனும் அச்சமின்றியா 'ஆம்' எனச் சொல்லவந்தாய் ? ஆஹா !

விருத்தம்.

அச்சமே சிறிதுமின்றி அவையினில் வந்திப்போது
துச்சமாம் வார்த்தை தன்னைச் சொல்லிய மூடாஇன்றன்
கச்சையைப் பிடித்திழுத்துக் கத்தியாற் கழுத்தைவெட்டி
உச்சிதப் பறவைகட்கே உணவென ஊட்டுவேனே.

அடே! இதோ உன்னைக்கொன்று, இவ்வாளினாலேயே என் தம்பி தேடிச்சென்ற அம்மாயனை ஹதம்செய்து வருகின்றேன். இப்படி வா.

[மந்திரிகள் தடுக்கின்றனர்.]

விடுங்கள் என்னை. என்னை மேலும் தடுக்க வந்தால் உங்களையும் கண்டதுண்டமாக்குவேன்.

எல்லோரும்:—பிரபு, க்ஷமிக்க வேண்டும்.

இர:—(திவமூர்த்தனைவிட்டு) அற்பனே க்ஷமித்தேன் உன்னை இவர்கள் வேண்டுகோளால். நில்லாதே என்னெதிரில். கோராசாக்ஷத குலத்திற்கே இழிவை உண்டாக்கிய மூலப்பதரே, நில்லாதே போ. அந்த அற்பனுக்கோ நாம் பயப்படுவது?

[திரியக்ஷன் 'ஐயோ ஐயோ' என்று ஓடிவருகிறான்.]

ஆஹா! திரியக்ஷா, என்ன சமாசாரம்?

திரி:—ஐயோ! கனகேஸ்வரா! நான் என்ன என்று சொல்வேன்! பாவி அந்தமாயன்—ஐயோ!

இர:—என்ன இது!—திரியக்ஷா, நடந்ததென்ன? எங்கே என் தம்பி இரண்யாக்ஷதன்?

திரி:—தேவா! தங்கள் தம்பி—ஐயோ!

இர:—ஹா!—அடே, நான் கேட்கக்கேட்க ஏன் சும்மா இருக்கின்றாய் நீ? ஐயோ! என்ன நடந்தது சொல்?

திரி:—இரண்யேசா, தங்கள் தம்பி ஏழை மாயனால் இறந்துபட்டார்.

இர:—ஆ!—(கீழே விழுகிறான்) ஆ! தம்பி! இரண்யாக்ஷா! நான் உனக்கு என்ன தவறிழைத்தே

னென்று, என்னைப் பிரிய மனங்கொண்டாய்! அப்பா! நீ இறக்கும்பொழுது, இப்பாவியாம் என்னை 'அண்ணு, அண்ணு!' என்று சொல்லிக் கதறினையோ! அடா தம்பி! சண்டாளன் நான் உயிருடன் இருந்தும் உனக்குத் துணையாய் வாராமற் போனேனே! மூத்தவனுகிய நான் இருக்க, இளைஞனுகிய நீயோ, முன் உயிர் துறப்பது!—ஆ! இது என்ன மாயம்! சுராசுரர்களை எல்லாம் ஜயித்து, எனக்கு வெற்றியை அளித்த குமரனே! நீ சண்டை என்பதை இன்னதென்றே அறியாத அக்கொடியபாவியாம் அரிக்கு இரை ஆனையே! அப்பா! இரண்யாக்ஷா! உன்னை நான் இதுவரை என் உயிர், என் தந்தை, என் தாய், என் தவம் என்று எண்ணி இருந்தேனே! நீ என்னை இப்படி தனியே விட்டுச் செல்லலாமோ! (எழுந்து) கண்ணே இரண்யாக்ஷா! இனி எப்போதடா உன் திருமுகத்தைப் பார்க்கப் போகின்றேன்!—ஆ! என்ன வன்னெஞ்சன் யான்! உயிருக்குயிரான என் தம்பி இறந்ததைக்கேட்டும், உயிருடன் இருக்கின்றேனே நான் (வாளை உருவுகின்றான்.)

[எல்லோரும் 'தேவா, தேவா' என்று வாளைப்பிடுங்கிக் கொள்கின்றனர்.]

திரி:—இரண்யேசா, என்ன இது! தாம் இப்படிப்பட்ட வேலையைச் செய்ய மனந்துணிந்தீரே! தாம் இறந்தால், தங்களுடன் நாங்களும் இறக்கப்போகின்றோம். அதுடன் நமது குலமே அற்றுப்போகப்போகின்றது. போனல், நமது பகைவனுகிய

அந்தப் பாவி அரியை யாரே பழிக்குப்பழி வாங்குவது?

இர:—திரியகூடா!—ஆம்; நீ கூறிய துண்மையே—மந்திரிகளே, நமது செல்வத்தைக் கண்டு, பொறுமைகொண்டு, எனது தம்பி இரண்யாகூடனைக் கொன்ற அந்த மடப்பையலை இனி யான் உயிருடன் விடேன்.

விருத்தம்.

பாலனும் என்றன்தம்பி தன்னையே பதைக்கக் கொன்ற
கோலனும் மாயன்தன்னைக் குரங்கெனப் பிடித்தேனானும்
எலவே வதைத்துக் கண்டதுண்டமே என்னச்செய்து
சாலவே அவன் ரத்தத்தைத் தண்ணீராப் பருகுவேனே.

ஆஹா! அவனை எப்படியாவது என் கரங்களாற் பிடித்து, கட்டியடித்து, மண்டையைச் சுக்கல் சுக்கலாக உடைத்து, அவன் ஊட்டியைக்கடித்து, உதிரத்தைக் குடித்து, என் பகையை மூடித்து, அதே உதிரத்தால், என் தம்பிக்குத் தர்ப்பணம் செய்கின்றேன்.

திரி:—இரண்யபூபா! நாம் அப்படி செய்யாவிடின் நமது பகைவர்களாகிய தேவர்கள், நம்மை எல்லாம் ஏளனம் செய்வார்கள். சிறிதும் நாணம் இன்றிப் பன்றி வடிவெடுத்துத் தமது தம்பியைக் கொன்ற அப்பாவியை நாம் சும்மா விடலாகாது.

இர:—ஆம், திரியகூடா! அப்படி நான் விட்டு விடுவேனாயின் என்னை இவ்வுலகத்துள்ளவரும் அவ்வுலகத்துள்ளவரும் என்ன என்று மதிப்பர்?

திவ:—கனகதுரையே! அடியேன் சொல்வதைத் தயை செய்து கேட்கவேண்டும். என் கடமையை நான்

செய்கின்றேன். பிறகு என்மீது கோபித்துக் கொள்ளலாகாது. அந்த மாயனே சாமானிய மானவனல்லன். சதுர்வித உபாயங்களுமறிந்தவன். அன்றியும், அவனிடை மாயவித்தையிற் றேர்ந்தவர் உலகில் ஒருவரும் இல்லை. மேலும், அவனுக்குத் தேவர்கள் எல்லாம் தொண்டுசெய்கின்றனர். இவற்றை எல்லாம் தாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

இர:—அப்படியா!—ஆம், 'எண்ணித் துணிக கருமம்.' அந்த அரியைக்கொல்ல, நல்ல உபாயத்தைத் தேடவேண்டுவது நமது முதற்கடமையாகும். மாயாவியான அரியோ ஜயவீரதீரனான என்றன் தம்பியை இறக்கச் செய்துளான். இதற்கென்ன செய்வது?—ஆம், அவனை அழிக்க தவமே நல்ல மார்க்கம். நல்லது, ஏ ராக்ஷதர்காள்! நீங்கள் எல்லோரும் பூலோகத்திலும் தேவலோகத்திலுமுள்ள அரிபக்தர்களைக் கண்ட கண்ட இடத்து, விளித்து, வலித்து, கழுத்தைப்பிடித்துக் கசக்கி இறுக்கி முறுக்கிக் கொல்லுங்கள். நானும் அந்த வானவரை வாட்டி, தானவரைக்கூட்டி, என் பலத்தைக்காட்டி, மாயனைவீட்டி, மற்றவரை ஓட்டி, கீர்த்தி நிலைநாட்டிடத் தவஞ்செய்து வருகிறேன்.

(செல்கிறான்)

[சபை கலைகிறது.]

———

முதலங்கம் - இரண்டாங் காட்சி.

களம்:—வீதி – காலம் : மாலை.

[இந்திரன் லீலாவதியின் கூந்தலைப்பற்றி இழுத்து வருகிறான்.]

லீலா:—ஐயையோ ! இந்த அனியாயத்தைக் கேட்பவரில்லையா ! என் பிராணநாதர் ஊரிலில்லாத சமயத்தில், பெண்பாலாகிய என்னை, இப்படி இழுத்துக்கொண்டு போகிறானே !

விருத்தம்.

மண்ணவர் சோகநீக்க மாதவம் பலவும் செய்தே
விண்ணவர் கோமானுனை வீணனே வெருட்டி ஓட்டிப்
பெண்ணெனைக் காக்க இந்தப் பெருந்திருவீதி தன்னில்
எண்ணிய ஓக்கம் கொண்டார் எவருமே இல்லையேயோ!

இந்திரா ! இது உனக்கடுக்குமா ? இப்படி செய்வது தர்மமா ? அடே, அயல்மாதரைத் தொடுவதும் பாவம் என்பதை நீ அறியாயா ! வேண்டாம் என்னைப் பேசாமல் விட்டுவிடு. ஐயோ, நான் என்ன செய்வேன் !

விருத்தம்.

ஒதிடும் புகழ்சேர் தைத்திய உத்தமன் மனைவியாகித்
தாதிகள் சூழ்ந்து போற்றித் தரும்வகை உபசரிக்க
மேதினி தன்னில் வாழும் மெல்லியல் எனையிப்பாவ
ஓதியைப் பிடித்திழுக்க உற்றதோ காலம் அந்தோ !

இந்திரன்:—அம்மா ! தம்மைக் கெடுக்க எண்ணங்கொண்டு இப்படி செய்கிறேன் என்றெண்ணவேண்டாம். பதிவிரதா சிரோமணியாகிய தாம் என்

மீது கோபங்கொள்ளலாகாது.

லீலா:—அடே பாவி! என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகப் பார்க்கிறாய்?

இந்:—அம்மணி! தாங்கள் என்னைப் பாவியென்று சொல்வது நல்லதல்ல.

லீலா:—அடே! நீ என்னை என் பிராணநாதர் ஊரில் இல்லாத சமயம் பார்த்து அழைத்துச்செல்வது மாத்திரம் நல்லதோ? சண்டாளா! வேண்டாம், என்னை விட்டுவிடு. என் பிராணநாதர் இது விஷயத்தைக் கேள்விப்பட்டால், எப்படியும் உன்னைக் கொன்றுவிடுவார்.

இந்—அதை அப்புறம் பார்த்துக்கொள்வோம் அம்மணி. தாம் தடைசொல்லாமல் வாருங்கள். அப்படி தாம் தடைசெய்தால், நான் வலிந்து இழுத்துச் செல்லவேண்டியதே. உம், வாரும்.

லீலா:—என்ன! என்னை எங்கு அழைத்துச் செல்லப் போகிறாய்?

இந்:—என்னுடன் வாருங்கள், நான் சொல்கிறேன்.

லீலா:—தேவேந்திரா, இது உனக்கு நியாயமா! உன் குலத்திற்கடுக்குமா!

விருத்தம்.

கற்பகச் சோலைவாழுங் கண்ணெரா யிரமே பெற்ற
விற்பன தேவர் கோவே வீதியி லெனையிழுத்தே
பற்பலர் பார்க்கவைத்தாய் பாதக மிதுவேய்ன்றே
சொற்படி எனையே மீட்டும் தூய்மனை சேர்ப்பிப்பாயே.

என்னை வீணை வருத்தாதே. இதோ நான் சொல்கிறேன். நீ என்னை மீட்டும் கொண்டுபோய்

விட்டால், நான் இவ்விஷயத்தை என் பிராண நாதருக்குத் தெரிவிக்கவே மாட்டேன். பேசாமல் விட்டு விடு.

இந்:—அம்மணி, விட்டு விடுவதற்கல்ல, நான் உம்மை அழைத்து வந்தது?

லீலா:—ஐயோ! மற்றெதற்காக!

இந்:—எங்களுக்கு உண்டாகும் துன்பத்தை நீக்கிக் கொள்ளவே, வேறொன்றும் அல்ல.

விருத்தம்

பாராதி யண்டமும் பாழாகச் செய்யுமப்
பாவியா மிரணியன் தவத்தினாலே
சீரான மனைவியாய் வந்தருள் தேவியே
திகைப்புறும் தேவர்தங் குலமடக்க
நேரான எதிரியாய் வந்துமே நேருவன்
நிமலமே உற்றவன் உதரந்தன்னில்
ஏராக வந்திட்ட பாலனென வேயழைத்
தேகலா னெனிது உண்மைதானே.

வேறு.

ஆதலால் கோபமே அம்ம வேண்டாம்
பாதக னெனவெனைப் பகர வேண்டாம்
வேதனைக் கஞ்சியிவ் வேலை செய்தேன்
ஏதுமே கேளா தென்பின் வாரீர்.

தாங்கள் அஞ்சவேண்டாம் எதற்கும்; வாரும் அம்மணி.

லீலா:—நான் இவ்விடத்தை விட்டுப் பெயரேன். நான் ஏன் உன்னுடன் வரவேண்டும்?

இந்:—அம்மணி! அப்படி சொல்லாதீர்.

லீலா:—நான் வரவேமாட்டேன். என்னை வேண்டுமானால் இவ்விடத்திலேயே கொன்று விடு. நான்

உன்னைத் தொடாவே தொடேன்—ஆ! பிராண நாதா!

இந்:—அம்மணி! வருகின்றீரா இல்லையா?

லீலா:—ஐயோ! அடபாவி, என்னைக் கருப்பவதி யென்றும் பாராமல், எங்கடா அழைத்துச் செல்ல எண்ணுகிறாய்?

இந்:—(தனக்குள்) இனி இவ்வம்மையுடன் பேசினால், காலதாமதமாகும்—அம்மணி! வாரும்.

[சிகையைப் பற்றி வலிக்கிறான்.]

லீலா:—அட பாவி! சண்டாளா! ஐயோ! என்னை இது சமயம் காப்பவர் இல்லையா! என்ன செய்வேன்?

[நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.]

இந்:—உம், நடவுங்கள்.

லீலா:—ஆ! சுவாமி! அபயம், அபயம்!

நார:—யார் அது!—ஆஹா! தேவேந்திரா! இது என்ன இது? இது என்ன நியாயம்? மஹாபதிவிரதாரத்தினமாகிய இம்மாதை ஏன் இப்படி அழைத்துக் கொண்டு போகிறாய்? விடுமுன்னம்—தேவேந்திரா! உனக்குப் புத்தி கெட்டுப்போயிற்று அல்லது விநாசகாலம் கிட்டியதா? இப்படியும் செய்யலாமா நீ? நன்மார்க்கத்தில் ஒழுகும் தேவர்களுக்கு நாயகனாகிய நீயே இப்படி செய்தால், மற்றவர்கள் செய்வதற்கென்ன? நன்றாய் இருக்கிறது உன் செய்கை!

விருத்தம்.

பன்னக மேலமர் என்னுத லேதிய
பலவாக மங்களும் கற்று நின்றாய்

பொன்னுடர் தேவனே யெண்ணுது செய்தனை
போதமே சிறிதிலாப் புத்தி யுற்றாய்
என்னுக என்னுக இம்மாதை இப்படி
இழுத்துமே தெருவினில் விட்டுவிட்டாய்
உன்னுடு போகமே தன்னுடழியுமிவ்
வுத்தமி வாய்திறந் துரைபுகன்றாள்.

வேறு.

என்னதான் தணிவுகொண் டிப்படி செய்தனை?
மன்னவா! இந்திரா! மலையிற கறிந்தவா!
கன்னிவா யாற்றியே கண்ணினீர் விட்டிட
மன்னியே வந்தனை மாண்ப தாகுமோ?

இந்:—

விருத்தம்.

சத்திய ஞானனந்தத் தனிப்பரஞ் சுடரை நாளும்
பத்தியி னுடிப்பாடிப் பரவிடும் செல்வம் பெற்ற
உத்தம குருவே உந்தம் உபயபா தங்கள்போற்றி
பித்தறு மனத்தி னேன்செய் பிழையதை மனங்கொளாதீர்.

சுவாமி! தெரியாமல் செய்துவிட்டேன். மன்னிக்கவேண்டும்.

நார:—மன்னிப்பதாவது! நீ செய்த இத்தவறுக்கு மன்னிப்பும் உண்டோ? நல்லது, நீ ஏன் இம்மாதை அழைத்தேகுகின்றாய்?

இந்:—குருசுவாமி! இவ்வம்மையார் கருப்பவதியாய் இருப்பதை அறிந்து, எங்கே இக்கருவில் உற்பத்தியாகும் குழந்தை, தங்குலத்திற் கேற்ப எங்களை எல்லாம் ஹிம்சை செய்யப்போகிறதோ என்று பயந்து, இவ்வம்மையை அடிபேன் நாட்டில் கொண்டுபோய் வைத்திருக்கத் தீர்மானித்தேன் சுவாமி.

நார:—ஏன்? அப்படி பிறக்கும் குழந்தையை நீ என்ன செய்யப்போகின்றாய்?

இந்:—இராக்ஷசகுணம் அதற்கும் வராதபடி பார்த்துக் கொள்ள எண்ணங்கொண்டேன், சுவாமி.

நார:—தேவேந்திரா, உன் எண்ணத்தை அறிந்தேன். நீ இம்மாதின் வயிற்றிற் பிறக்கப்போகும் பாலனைச் சாமானியன் என்று எண்ணிவிட்டாய்.

விருத்தம்.

மாதேவனைத் தொழு தேத்திடும் மாதவர்
மனத்தினில் என்றும்வாழ் சுயம்ப்ரகாசன்
ஓதா துணர்பவன் உம்பர்முடி யானவன்
உன்னையும் என்னையும் காக்குநேசன்
தீதான கன்மங்கள் ஒன்றுமே செய்திடான்
சித்தனைந்தவடி வான ஈசன்
பாதார விந்தமே பற்றெனப் பற்றினேன்
பதுமமா தருள்பெற்ற முகவிலாசன்.

வேறு.

தானவன் என்றுமே தனய னிவனை
ஆனவன் மனத்துள் அச்சங் கொள்ளேல்
வானவர் மகிபஎன் வார்த்தை தன்னில்
ஊனமொன் றிராதிதை உணர்வை பின்னையே.

தெரிகிறதா? அவன் எனக்கு மாத்திரம் அல்ல; எனக்கும் என் அப்பனுக்கும், பக்தி இன்னதென் பதைக்கற்றுக்கொடுக்க வல்ல சமர்த்தன். அறத்திற் சிறிதும் பிறழாத அறிஞன். அதைப்பற்றி நீ சிறிதும் அஞ்சாதே. நீ இம்மாதை விட்டுப்போ. நான் எனது ஆசிர்மத்திற்கு அழைத்துச்சென்று அங்கு வைத்துக்கொண்டிருக்கிறேன்.

இந்:—தங்கள் சித்தம்.

நார:—நல்லது நீ போ. (இந்திரன் போக) அம்மா லீலாவதி! வா போவோம். உன் நாதன் வரும் வரையில் என்னிடமே இரு. ஒருவேளை தேவர்கள் மறுபடியும் வந்து, உன்னை இழுத்துச் செல்லினும் செல்வர். ஆகவே, நீ உன் அரண்மனைக்குப் போகவேண்டும் என்ற ஆசையை விட்டுவிடு.

லீலா:—சுவாமி! தங்கள் வார்த்தையையும் மறுப்பேனே? தங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்.

நார:—ஆனால், புறப்படு.

[பாடித்துக்கொண்டே போகிறார். அவர் பின் லீலாவதியும் போகிறாள்.]

முதலங்கம் - மூன்றுங் காட்சி.

களம்:—காடு-காலம்:—காலை.

[இரணியன் தவம் செய்து கொண்டிருக்கிறான். அப்போது பிரமதேவன் வருகிறான்.]

பிரமன்:—ஆஹா! தேவர்கள் கூறியது உண்மையாகவே இருக்கிறது. இந்த இரணியனுடைய தவமகிமையே மகிமை! இவனுடைய வைராக்யமே வைராக்யம்!—ஆ! என்னையே இத்தபாக்னி இப்படி எரிக்கிறதே, மற்றவர்களை இது என்ன தான் செய்யாது! நானும் எத்தனையோ பேர் தவம்செய்யப் பார்த்துளேன். இவனைப்போல் கொடூரமான தவம் செய்தவர்களை இதுவரை கண்டதே கிடையாது. அரச செல்வத்தை அனுப

வித்து, ஆனந்தத்திலேயே மூழ்கிக் கிடந்த இவன்,—ஆ! இதோ பார், மூங்கில்களாலும், புற்றுக்களாலும், தரணங்களாலும், மறைபட்டவனாய், எறும்பு, காட்டு முதலியனவற்றால் பக்ஷிக்கப்பட்ட இரத்தம் பெருகும் மாம்ச சரீரியாக இருக்கின்றான்—நல்லது, இவனை எழுப்புவோம்.—அப்பா இரணியா! உனக்கு மங்களம்உண்டாகுக! உன் தவம் சித்தியாயது! என்னவேண்டுமோ கேள், எழுந்து. உன் அற்புதமான தவத்தைக் கண்டு மகிழ்ந்தேன். (கமண்டலத்தில் உள்ள நீரைத் தெளிக்கிறான்.)

இர:—(எழுந்து கைகூப்பி)

விருத்தம்.

சர்வாண்ட காரண சமஸ்தஜன சாதகா
ஷாட்குண்ய தேவபரி பூரணேசா
நிர்வாண தாயகா நித்யமுத்தேஸ்வரா
நிமலகமலாசன வாச நேசா
தர்மாதி ரக்ஷகா தைத்யகுலசேகரா
சத்வ ரஜஸ்தமோ குணஸ்வ ரூபா
கர்மாதிகாரகா கலாதேவி நாயகா
கடாக்ஷவீக்ஷண்ய சத்குரு விலாசா.
நன்மனத் தவர்க்கருள் நான்முக தேவனே
உன்னடி போற்றினேன் உளத்துய ரற்றனன்
என் மனக் குறையதை யின்றெழித் தாளுவாய்
அன்னத் தமர்ந்திடும் அன்புடை ஐயனே.

[பணிகின்றான்.]

பி:—இரண்யா! எழுந்திரு.

இர:—(எழுந்து) ஹே பரம பிதாவே! தங்களைக் கண்டதால் இன்று அடியேன் தன்னியனானேன்;

கவலை விண்டேன். காரிய முடியும் வழியையும் கண்டேன்.

பிர:—இரண்யா! என்ன வரம் வேண்டி, நீ இத்தவத் தைச் செய்தனை ? கேள் ; தருகின்றேன்.

இர:—பரம்பொருளே ! தேவரீர் வரம் கொடுப்பது உண்மையானால், யான் எதை விரும்புகிறேனோ, அதையே கொடுக்க வேண்டும்.

பிர:—அப்படியே தருகிறேன்.

இர:—ஆனால், வரதோத்தமா! உம்மால் சிருஷ்டிக்கப் பட்ட எந்தப் பிராணிகளாலும், எனக்கு மரணம் உண்டாகலாகாது. அன்றியும், இரவிலும் பக லிலும், உள்ளிலும், வெளியிலும், பூமியிலும், ஆகாயத்திலும், உம்மால் சிருட்டிக்கப்படாத யாதொன்றினாலும், யாதொன்றன் சகாயத்தாலும் ஆயுதங்களாலும், மனிதர்களாலும், மிருகங்களா லும் உயிருற்ற மற்றைய பொருள்களாலும் அலை யாலும் மலையாலும், உயிரற்ற ஏனைய பொருள் களாலும் எனக்கு மரணம் உண்டாகலாகாது. மேலும், சர்வலோகங்களுக்கும் நானேதலைவனாக வேண்டும். என்னை வெல்லும் திறம் எவர்க்கும் எதற்கும் இருத்தலாகாது. இன்னும், தங்களுக்கு இருப்பதுபோலவே எனக்கும் அணிமாதி ஐஸ் வர்யங்களை அனுக்கிரஹம் செய்யவேண்டும்.

பிர:—ஆ !—தந்தேன், வரங்களை. (செல்கிறான்.)

இர:—கொன்றேன் அரியை. (ஓடிச் செல்கிறான்.)

முதலங்கம் - நான்காங் காட்சி.

களம்: தேவசபை - **காலம்:** பகல்.

[அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன், முதலானோர் உட்கார்ந்திருக்கின்றனர்; அவர்கள் இடையே தேவேந்திரன் துயருடன் கூடியவனாய் இருக்கிறான்.]

அக்கினி:—தேவராஜா! என்ன இது? இப்படி ஏக்கத்துடன் இருக்கின்றீரே.

இந்:—ஆஹா!—தெரியாமற் செய்துவிட்டேன்.

இயமன்:—செய்துவிட்டதால், இப்பொழுது ஆய்விட்டதென்ன? அத்துட்ட இரணியன் கொட்டமடக்க, இட்டவழிகளே ஏன் நாடலாகாது?

நிருதி:—என்னவழி இருக்கிறது?

வருணன்:—வேறு மார்க்கமே இல்லை.

வாயு:—தேவேந்திரா! என்ன இருப்பினும் நம்முடைய மனதைச் சிதறவிடலாமோ?

குபேரன்:—தேவநாதா, இதற்கெல்லாம் நாம் சஞ்சலப்படலாமோ? எவ்வுயிர்களையும் காத்தளிக்கவல்ல திருமறுமார்பன் நமக்குத் துணையாய் இருக்கும் போது ஏன் பயப்படவேண்டும்?

ஈசானன்:—அமரர்கோவே, அயர்வு கொள்ளாதீர். அப்பாற்கடல்நாதனை நம்பும்.

[உள்ளிருந்து "ஆஹா அப்படியா!" என்று இரணியன் கூச்சலிட்டுவருகிறான்.]

எல்லோரும்:—ஆ ! பரந்தாமா !

[மூலைக்கொருவராய் ஓடப்பார்க்கின் றனர். அவர்களை வந்த இரணியன் தடுக்கிறான்.]

இர:—ஆஹாஹா ! அடே இந்திரா! எங்கே நழுகப் பார்க்கிறாய் ?—ஏ குபேரா! இயமா! நீங்கள் எல் லோரும் எங்கே செல்ல எண்ணம் கொண்டீர் ? இவ்விடத்தை விட்டுப் பெயர்ந்தால், கொன்று விடுவேன் உங்களை.

இயமன்:—தங்கள்—

இர:—பேசாதே. (வாளை உருவுகிறான்)

இயமன்:—இல்லை, மன்னிக்க—

இர:—மூடு வாயை.

இயமன்:—(வாயை மூடிக்கொள்ளுகிறான்)

இர:—அடே இந்திரா! என்னிடமா உன் சமர்த்தைக் காட்டப் பார்த்தனை ? ஆஹா! (அவன் கரத்தைப் பற்றி) வா, இப்படி வந்து நில். இப்போது என்ன சொல்லப்போகிறாய்?

இந்திரன்:—ஒன்றும் இல்லை. மன்னிக்க வேண்டும். (வணங்கி)

விருத்தம்.

தாணியோர் போற்றும் தூய தைத்தியர் மணியே நல்ல
கருணைவா ரிதியாய் வந்த காசிபர் சுதனே நாளும்
சரணமென் றடைந்த பேரைத் தாங்கிடும் தயாள வீர
இரணியேஸ் வரனே உன்றன் இணையடி இறைஞ்சி னேனே.

இர:—என்ன? கட்டு கையை.

இந்:—(கைகட்டி) இதோடு விட்டுவிட்டால் ஓடிப்போகி றேன்.

இர:—பேசாதே, மடையனே,! அடே! என் குல பத்னியை இழுத்து வந்த கை இது அல்லவா? ஆஹா, இதனை இப்போதே இரண்டு துண்டமாக்குகிறேன் பார்.

இந்:—கனதுக துரையே! அறியாமையால் செய்த குற்றத்தைப் பாராட்டாமல், அடியேனை மன்னிக்க வேண்டும்.

குபேரன்:—இரண்யேஸ்வரா! இவர் தெரியாமற்செய்து விட்டனர்; தேவரீர் மன்னிக்க வேண்டும்.

இர:—அடே, நீயார்? (குபேரன் காதைப்பற்றி) என்ன தைர்யங்கொண்டு இவனுக்குத் துணையாய் வந்தனை நீ? நல்லது உன்பெயர் என்ன?

குபே:—அப்பா! அப்பா! போதும், காதை விட்டு விடுங்கள். ஐயோ, மிகவும் நோகிறது.

இர:—பெயர் என்ன செல்லடா என்றால்—

குபேரன்:—குபேரன்—

இர:—குபேரனு? இனி துணைக்கு வரமாட்டாயே?

குபேரன்:—சத்தியமாய் வரமாட்டேன்.

இர:—போ தடியனே—ஏ திக்குப்பாலகர்காள்! இப்போது என்னசொல்கின்றீர்? பேசாமல் என்னை. இப்போது பணிந்து நான் இட்டவேலையைச் செய்கின்றீர்களா, அல்லது—

எல்லோரும்——வேண்டாம், வேண்டாம். இட்டவேலையைச் செய்கிறோம்.

இர:—சபாஷ்! ஆனால், முதலில் நீங்கள் என்காலில் விழுங்கள்.

[திக்குப்பாலகர் பணிகின்றனர்].

எழுந்திருங்கள், போதும் பணிந்தது. (தேவர் கள் எழுந்தபின்) அடே இந்திரா ! நீ என்னவேலை செய்ய வேண்டும் தெரியுமோ ?

இந்:—கட்டளையின்படியே செய்கிறேன்.

இர:—சபாஷ் ! நீ என் அந்தப்புரத்துப் பெண்களுக் குக் குற்றேவல்செய்து கொண்டிரு போ, நில் லாதே.

இந்:—அப்படியே. (போம்போது தனக்குள்) ஆ ! பரந் தாமா !

(போகிறான்)

இர:—அடே இயமா, நீ என்ன செய்யப்போகிறாய் ?

இய:—சொல்லியபடி செய்கிறேன்.

இர:—நல்லது, நீ என் உத்தரவின்றி ஒருவர் உயிரை யும் கொண்டுபோகலாகாது. தெரியுமா ?

இய:—அப்படியே.

இர:—நல்லது, நீ போய் என் குதிரை லாயங்களைச் சுத்தமாய் வைத்திரு.

இய:—(தனக்குள்) நல்லவேலை (போகிறான்)

இர:—அடே வாயு, நீ என் ஊரில் உள்ள வீதிகளை ஓர் தூசும் இல்லாதபடி தினந்தோறும் சிவவேண் டும்.

வாயு:—அப்படியே செய்கிறேன், (போகிறான்)

இர:—குபேரா, இப்படிவா, நீ என்னவேலை செய்ய வேண்டும் தெரியுமா ?

குபேரன்:—சொல்லுங்கள்.

இர:—ஆம், நீ போய் அந்தப்புரத்தில் உள்ள பெண்க ளுக்கு மஞ்சள் அரைத்துக்கொடு போ.

குபேரன்:—(தனக்குள்) அதோடுவிட்டாயே (போகிறான்)

இர:—அடே வருணா, நீ என் ஊரில் உள்ள வீதிகளுக்குத் தினந்தோறும் காலை மாலைகளில் நீர் தெளித்து வாவேண்டும், தெரியுமா ?

வருணன்:—அப்படியே, சித்தம் (போகிறான்)

இர:—நீங்கள் இருக்கிறீர்களா ? அடே நிருதி, இப்படி வா. நீ என் ஊரில் உள்ள குப்பைத்தொட்டிகளில் வீழ்கின்ற குப்பைகளை எல்லாம் அவ்வப்போது நீக்கிச் சுத்தமாய் வை. போ, நில்லாதே.

நிருதி:—(தனக்குள்) ஈசனே ஈசனே ! (செல்கிறான்)

இர:—ஈசான்யா, அக்கினி, நீங்களிருவரும் என்னுடன் வாருங்கள். நீங்கள் செய்யவேண்டிய வேலையைத் தெரிவிக்கின்றேன். (போகிறான்)

[எல்லோரும் செல்கிறார்கள்]

முதலங்கம் - ஐந்தாம் காட்சி.

களம்: - பாற்கடல் - காலம்: - மாலை.

[மஹா விஷ்ணு ஆதிசேஷன்மீது அரிதுயிலமர்ந்திருக்கிறார். தேவர்கள் பிரமனுடன் வந்து பணிந்து துதிசெய்கின்றனர்.]

விஷ்ணு:—குழந்தாய், பிரஹ்மா, என்ன விசேஷம் ? ஏது நீங்கள் இவ்வளவு தூரம் வந்தது ?

பிரமன்:—அண்ணா, தேவரீர் அறியாத விஷயமும் உண்டோ இவ்வவனியில் !

விஷ்ணு:—குழந்தாய், இவ்வளவும் உன்னால் வந்த தன்றே ? நான் என்ன செய்வது ? நீ தந்த வரத்தின் மகிமையால் அவன் தலைதெரியாதாடுகிறான். பார், நானும் வைகுண்டத்தைவிட்டு ஓடிவந்து விட்டேன்.

பிர:—அண்ணா, இதோ பாரும் தேவர்கள் முகத்தை. தாங்கள் கூறிய மாற்றத்தைக் கேட்டதும் தவிக்கின்றனர். தாம் பராமுகம் செய்வதற்கு இது சமயம் அல்ல அண்ணா ! நான் செய்த தவறுக்காக, இப்போது அவனால் நான் அனுபவிக்கின்ற துன்பமே போதுமானது. அண்ணா, அபயமளியும்.

தேவர்கள்:—அபயம் ஐயனே !

விஷ்ணு:—தேவர்காள், அஞ்சாதீர். சற்று முன் பூமி தேவியும்வந்து தன்னால் பூபாரம் சுமக்க இயலவில்லையென்று கூறிப்போயினள். விரைவில் அத்தானவனை ஒழிக்கின்றேன். நீங்கள் இன்னும் சில நாள் சகித்திருங்கள்.பிரமன் தந்தவரமும்பொய்த்திடலாகாது. விடைபெற்றுக் கொள்ளுங்கள்.

எல்லோரும்:—(பாடிப்பணிகின்றனர்.)

விஷ்ணு:—சுகமே வாழ்வீர். சென்று வருவீராக !

[தேவர்கள் எழுந்து பணிந்து செல்கிறார்கள்]

———

முதலங்கம் - ஆருங் காட்சி.

களம்: - ஆசிரமம் - காலம்: - பிற்பகல்.

[லீலாவதி உறங்கிக்கொண்டிருக்கிறாள். அப்போது நாரதர் பாடி வருகின்றனர்.]

நார:—ஆ ! இதுவே நல்ல சமயம். லீலாவதி அதிக நித்திரையில் இருக்கிறாள். இப்போதே நான் இவள் கருவில் இருக்கும் சிசு அறிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினுடைய மகிமையையும், அவனுடைய அஷ்டாக்ஷரத்தின் பெருமையையும் எடுத்துச் சொல்கிறேன். அதனால், அப் பரந்தாமன் பூமிதேவிக்களித்த வாக்கும் நிறைவேறும். தேவர்கள் குறையும் நிவர்த்தியாகும்.

விருத்தம்.

"பாருருவின் நீர்எரிகால் விசும்புமாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஒருருவின் மூவருமே என்னநின்ற
இமையவர் தந்திரு வுருவே றென்னும்போது
ஒருருவம் பொன்னுருவம் ஒன்றுசெந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்துநின்ற
மூவுருவுங் கண்டபோ தொன்றும் சோதி
முகிலுருவ மெம்மடிக ளுருவந்தானே"

"எழுமைக்கும் எனதாவிக்கு இன்னமுதத்தினை எனதாருயிர்
கெழுமிய கதிர்ச்சோதியை மணிவண்ணனைக் கேசவனை
விழுமிய அமார்முனிவர் விழுங்குங் கன்னற்கனியினைத்
தொழுமின் தூயமனத்தாய் இறையுநில்லாது பாவங்களே"

இதுவே போதுமானது. நித்திரைகலையும் சமையம் ஆகிறது. பூமறுமார்பன் பொற்பாம் அஷ்டாக்ஷரங்களின் மகிமையையும் புகல்கிறேன்.

விருத்தம்.

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுந்துய
ராயினவெல்லாம்
நிலந்தாம் செய்யு நீள்விசும்பருளும் அருளொடு
பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லோநான் கண்டுகொண்டேன்
நாராயண என்னும் நாமம்."

ஆ! நாராயணயநமஃ என்னும் நாமமே நாமம்!

லீலா:—ஆ! பிராணநாதா!

நார:—என்ன! இவள் சொப்பனம் காண்கிறாளோ!

லீலா:—(திடுக்கிட்டெழுந்து) பிராணநாதா! பிராண நாதா! (தேடுகிறாள்.) ஐயோ! இப்போது என் கண்முன்பாக வந்தவர் எங்கே போயினர்! பிராண நாதா!

நார:—லீலாவதி, என்ன இது!

லீலா:—ஆ, பிராணநாதா! (அவரிடம் செல்கிறாள்.)

நார:—அரி! அரி! லீலாவதி, என்னை நாரதன் என்று அறியாயோ?

லீலா:—ஆ! சுவாமி, தாங்களா? இவ்விடத்தில் என் பிராணநாதர் வந்தாரே அவர் எங்கே?

நார:—உன் நாயகனா?

லீலா:—ஆம்; இங்குவந்தாரே இப்போது.

நார:—இரணியனா இங்கு வந்தான்?

லீலா:—ஆம் சுவாமி.

விருத்தம்.

கமலநேத் திரவதன காந்தியும் கண்கவர்
கனககேயூரங்கள் அணிந்த மார்பும்
அமலதாரூட்யகர யுகளமும் அரூபியாம்
அனங்கனை ஜயித்திட்ட வடிவழகதும்

நிமலபாதாம்புய நேர்த்தியும் நெஞ்சதில்
நிலைத்திட வந் தெதிர் நின்ற என்றன்
விமலகா ருண்யகுண ராகுமென்றன்
வீரதிகாரகுண பிராணநாதர்.

எங்கவர் சென்றனர் ஏழை யேற்கதை
துங்கமுன் முனிவரே சொல்லிடாமலே
இங்குநீர் தாமதம் எனை செய்குநீர்
நங்கைபால் மறைப்பது நல்லதாகுமோ.

என்ன சுவாமி, ஒன்றும் அறியாதவர்போலக் கேட்கின்றீரே ?

நார:—லீலாவதி, நீ கண்டது சொப்பனமே அல்லது வேறல்ல. உன் நாதன் இங்கு வரவேயில்லை.

[இரணியன் வருகின்றான்.]

இர:—ஆ, லீலாவதி !

லீலா:—ஆ ! பிராணநாதா ! (இரணியன் தோள்மேல் சாய்கிறாள்.)

நார:—இரண்யேசா, உங்களுக்கு சத்புத்திர சந்தானம் உண்டாகுக.

இர:—ஓய் நாரதரே, உமது ஆசீர்வாதத்தை ஓர் புறம் நிறுத்திவையும். நீர் என்ன காரியம் செய்தீர் ?

விருத்தம்.

இச்சக நடுங்கு மாறே இணையிலாத் தவங்கள் செய்தே
உச்சிதப் பேறு பெற்றாய் உணர்வொரு சிறிது மற்றாய்
எச்சிலை மிச்சு வான்போல் இந்திரன் செய்தா னேனும்
வைச்சுநீ இவ்வி டத்தென் மனைவியை வருத்த லாமோ ?

ஆஹா ! அந்த இந்திரன்தான் அறிவில்லாமல் இழுத்து வந்தாலும் இவளை மீட்டும் என் அரண்மனையிற் சேர்ப்பதைவிட்டு, நீரும் இவ்விடத்திலேயே வைத்துக்கொண்டீரல்லவா ?

லீலா:—பிராணநாதா, அவர்மீது கோபம் வேண்டாம். அவர் என்னுடைய நன்மையைக் கோரியே அப்படி செய்தார்.

நார:—அம்மா, நீயே சொல். இதுதான் பழியொரு பக்கம், பாவம் ஒரு பக்கம் என்பது. நான் சும்மா இருந்துவிடலாகாதா ? எத்தனையோ இடங்களில் இத்தகைய வம்பில் தலையிட்டுக்கொண்டு தலை மொட்டையானேனே, அஃதோடு விட்டுவிட்டால். உம், வேண்டும் எனக்கு.

இர:—ஓய் ! அதிகமாய்ப் பேசாதேயும்—லீலாவதி, நாரதர் உன் நன்மைக்காக என்ன செய்தார் ?

நார:—(தனக்குள்) உம், வினைசகாலம் கிட்டிக்கொண்டது இவனுக்கு.

இர:—என்ன லீலாவதி, நான் கேட்கிறேன், நீ சும்மா இருக்கிறாய் ?

லீலா:—தாங்கள்தான் அதிக கோபமாய் வார்த்தையாடுகிறீரே.

இர:—இல்லை, சொல்.

லீலா:—அரண்மனையில் கொண்டுபோய் விட்டால், எங்கே தேவர்கள் மறுபடியும் வருகிறார்களோ என்றுதான் இப்படி செய்தார்.

இர:—அப்படியா !—நாரதரே, நான் தெரியாமல் தங்களைக் கடிந்துகொண்டேன். அது விஷயத்தை மனதில் வையாதேயும். அஃதிருக்கட்டும், இப்போது தேவர்கள் கதி தெரியும் அன்றோ தங்க

ளுக்கு? தங்கள் தந்தையும் எனக்குக் குடை பிடிக்கின்றார். நீர் எனக்கு இவ்வுபகாரத்தைச் செய்ததால், உமக்கு நல்ல வேலையே தருகிறேன். நீர் தினந்தோறும் வந்து, எனக்குப் பஞ்சாங்கம் படித்துப் போகவேண்டும். என்ன சொல்கிறீர்?

நார:—அப்படியே.

இர:—நான் வருகிறேன்—கண்ணே லீலாவதி, வா போவோம்.

லீலா:—இதோ வந்தேன் பிராணநாதா—சுவாமி, நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

நரர:—சுபுத்திரா சித்திரஸ்து.

[இரணியன் லீலாவதியுடன் போகிறான்.]

முதலங்கம் முற்றும்.

இரண்டாமங்கம் - முதற் காட்சி.

களம்: - உபவனம் - காலம் : மாலை.

லீலாவதி:—என்ன இன்னும் என் பிராணநாதர் வரக் காணேம்! அவர் எப்போதும் இப்படியே செய்கிறார். சொல்கிற நேரம் ஒன்று, வருகிற நேரம் ஒன்று. இருளும் நேரமாகியும் வரவில்லையே! ஆஹா! தென்றல் மெல்லென வீசி, அருகில் உள்ள மலர்களின் சுகந்தத்தை எங்கும் பரவச் செய்கிறதே. பார், பக்ஷிகள் எல்லாம் என்ன இனிமையாகப் பாடுகின்றன! இத்தகைய சமையத்தில் வராமல், எப்போதோ வருகிறார் அவர். உம், அவரை நோவதால் பயன் என்ன! அவருக்குக் குழந்தை பிரகலாதனுடைய ஏக்கமே பெரிதாய்விட்டது. பாவம், அவர் என்ன செய்வார்! நானும் என்னுல் ஆனவரையில், பிரகலாதனே அரிநாம சங்கீர்த்தனம் செய்யாதே என்று சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லையே. என்ன என்ன பாடல்களைப் பாடுகிறான் குழந்தை! அவன் பாடுவதைக் கேட்கக் கேட்க, எனக்கு எவ்வளவோ பிரியமாகத்தான் இருக்கிறது. ஆனால், அவை என் பிராணநாதர் செவிக்கு நாராசத்தைக் காய்ச்சிவிட்டதுபோல இருக்கின்றனவே! இதற்கு நான் என்ன செய்வது—குழந்தை, அத்தனைப் பாடல்களை எப்படிகற்றுக்கொண்டான்! யார் அப்பாடல்களை அவனுக்குக் கற்றுக்கொடுத்தார்களோ தெரியவில்லையே. என்னதான் கற்றுக் கொடுத்தாலும், அறியாப் பாலகனுக்கு அத்

தூணை பாடல்கள் வருமா ? இப்போதுதான் இப்படி பாடுகிறான் என்றால் யாராவது கற்றுக்கொடுத்திருப்பார்கள் என்று எண்ணலாம். தவழும் பருவத்திலிருந்தே, நாராயண என்றும், கோவிந்தா என்றும், அரி அரி என்றும் சொல்லி வருகிறானே. அப்போது அவனுக்கு யார் கற்றுக் கொடுத்திருப்பார்கள்?—இது மாயமாகவே இருக்கிறது ! அவன் தூங்கும்போதுகூட, திடீரென்று விழித்துக்கொண்டு, நாங்கள் பயப்படும் விதமாக, நாராயண நாராயண என்று சொல்கிறான்.

இர:—(ஓர்புறமாய் வந்து) லீலாவதி !

லீலா:—ஆ பிராணநாதா!—இவ்வளவு நேரமா பிராண நாதா தாங்கள் வருவதற்கு ?

இர:—என்ன நேரமாயது ? நான் குறித்தவண்ணமே வந்து சேர்ந்தேன்.

லீலா:—இதுதான் நீங்கள் குறித்த நேரமோ ? உம், நான் அரண்மனைக்குப் போகிறேன்.

இர:—என்னடா கஷ்டமாய்விட்டது !—கண்ணல்ல, லீலாவதி, இப்படி வா. நான் என்ன செய்வேன்! எந்நேரமும் குழந்தை பிரகலாதனுடைய எக்கமே பெரிதாய்விட்டது. எப்படி அவனுக்கு ஏற்பட்டுள்ள பைத்தியத்தை நீக்குவது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அதனால் குறித்த நேரத்தையும் மறந்தேன்.

லீலா:—சரிதான் பிராணநாதா. வாரும், இதோ இவ்வாசனத்தில் உட்காரும்.

இர:—லீலாவதி, வேண்டாம், நான் சிறிதுநேரம் உலாவுகிறேன்.

லீலா:—இதுதானே ? ஆனால்—

இர:—இல்லை இல்லை, நீ கோபித்துக் கொள்ளாதே. (போய் உட்கார்ந்து) நீயும் வந்து உட்கார்ந்தால் அன்றோ ?

லீலா:—(அவனருகில் உட்கார்ந்து) பிராணநாதா, குழந்தையை அழைத்துவரச் சொல்லட்டுமா ?

இர:—லீலாவதி, வேண்டாம். ஏன் என்னை வீணே வருத்தத்துக்கு உள்ளாக்குகிறாய் ?

லீலா:—என்ன பிராணநாதா, நமது அருமைப்பாலனை பார்க்கவுமா தமக்கு அவ்வளவு வருத்தம் ?

இர:—கண்ணே, அப்படி அல்ல. அவன் முகத்தைப் பார்க்கும்போது எனக்கு எவ்வளவோ ஆனந்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், அவன் வாயில் வரும் சொற்களைக் கேட்கும்போதெல்லாம், எனக்குக் கர்ணகடோரமாய் இருக்கிறது.

லீலா:—குழந்தைதானே பிராணநாதா அவன்? ஏதோ அறியாத்தனத்தால் எதை எதையோ சொல்கிறான். வயது வந்துவிட்டால், சொல்லப்போகிறானா ?

இர:—லீலாவதி, நீ சொல்வதும் உண்மையே. அஃதிருக்கட்டும் ; பச்சைக் குழந்தையாம் நமது அருமைப்பாலன், அவ்வளவு பாட்டையும் எப்படி கற்றுக்கொண்டான் ! எனக்கு இது ஒரு பெரிய ஆச்சர்யமாகவே இருக்கிறது.

லீலா:—ஆம், பிராணநாதா, அதுதான் எனக்கும் தெரியவில்லை.

இர:—ஒருவேளை அந்தத் திருட்டு மாயன், பிசாசாக உருக்கொண்டு அவனிடம் குடிகொண்டானோ ?

(பிரகலாதன் உள்ளிருந்து பாடிக்கொண்டு வருகிறான்.)

லீலா:—பிராணநாதா, பிராணநாதா, அதோ வருகிறான் ; நமது குழந்தை ! வாரும் நாம் மறைந்திருந்து கேட்போம்.

இர:—ஆம் ஆம், வா. (இருவரும் மறைகிறார்கள்)

[பாடிக்கொண்டே வெளிவருகிறான்]

[இரணியனும் லீலாவதியும் வெளிவருகிறார்கள்]

இர:—அப்பா பிரகலாதா !

பிரக:—அண்ணா, பணிகிறேன்,—அம்மா, உங்களை நான் எங்கெங்கென்று தேடுவது ?

லீலா:—கண்ணே, என்னைத் தேடிக்கொண்டா வந்தாய்?

பிரக:—ஆம் அம்மணி.

லீலா:—ஏன் ?

பிரக:—இன்று எனக்கு ஒரு புதுபாட்டு ஞாபகத்திற்கு வந்தது அம்மணி. அதை உங்களிடம் பாடிக் காட்ட வேண்டும் என்று தேடினேன்—அண்ணா தாங்களும் கேட்கிறீரா ?

இர:—குமாரா, கேட்கிறேன் ; என்ன பாடல் அது !

பிரக:—சொல்லட்டுமா ?

இர:—சொல்.

[பிரகலாதன் பாடும்போது, இரணியன் காதைமூடிக் கஷ்டப்படுகிறான்.]

லீலா:—ஐயோ !

இர:—பாலா, இப்படி வா. உனக்கு யார் இப்பாடலைக் கற்றுக் கொடுத்தது ?

பிரக:—அண்ணு, எனக்கு யாரும் கற்றுக்கொடுக்க வில்லையே ! இதையுமோ ஒருவர் கற்றுக்கொடுக்க வேண்டும் ?

இர:—குழந்தாய், நான் சொல்வதைக் கேள். இனி நீ இத்தகைய பாடல்களைப் பாடாதே ; தெரியுமா ?

பிரக?—நான் வேண்டும் என்று பாடவில்லையே ! அது வே வருகிறது.

இர—அதுவே வருகிறதா !—வந்தால், மறந்துவிடு.

பிரக:—மறந்து விடுகிறதா ? அப்படி என்றால் !

லீலா:—அப்பா, இப்படி வா நான் சொல்கிறேன். ஏதா வது பாடல் உன் ஞாபகத்திற்கு வந்தால், அதைப் பாடாமல் விட்டுவிடு.

பிரக:—அம்மணி, அது என்னால் எப்படி முடியும் ! அது முடியவே முடியா தம்மணி.

இர:—முடியாதா ? (அடிக்கப்போகிறான்)

லீலா:—(தடுத்து) பிராணநாதா, என்ன இது ! குழந் தை என்றும் பாராமல் இப்படி மூர்க்கத்தனமாய் இழுக்கிறீரே, அவனை. விடுங்கள் பிராணநாதா அவனை. அதோ பாரும் ; குழந்தை அழுகிறான்.

இர—ஆம்—நயினு, இப்படி வா.

பிரக:—நான் வரமாட்டேன். என்னைத்தான் அடிக்கவந் தீரே.

இர:—கண்ணல்ல, இப்படிவா (அருகழைத்து) நானும் உன்னை அடிப்பேனு? என் கண்ணுயிற்றே நீ. எதோ எனக்கொரு முத்தம் கொடு.

பிரக:—இரும் அண்ணு—அம்மா, இந்தப் பாட்டைக் கேளும்; இது மிகவும் நன்றுயிருக்கும். இப் போதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

இர:—குழந்தாய், எதையும் பாடவேண்டாம் நீ.

பிரக:—ஆனல், நான் போகிறேன்.

லீலா:—(பிரகலாதனைத் தடுத்து) கண்ணே, இரு—பிராணநாதா, அவன் இஷ்டப்படியே பாட்டும். அதனல் உமக்கென்ன கெட்டுப்போகப் போகிறது?

இர:—பிரகலாதா, அந்த துராத்மனை துஷ்ட அரியை மாத்திரம் தோத்திரம் செய்யாதே அவன் நமது குலத்திற்கே கொடும்பகைவன்; உன் சிறிய தந் தையைக் கொன்றவன். கண்ணே, நீ அவனைப் பாடுவதைவிட்டு, வேறெதையேனும் பாடு.

பிரக.—அண்ணு, அண்ணு, என்ன இப்படி சொல்கி றீரே! அப்பரமனைப் பாடும்போது எனக்கு உண் டாகும் ஆனந்தம் வேறெதிலும் காணுமே அண்ணு,

விருத்தம்.

தித்திக்கும் தேனுடன் சீனிசர்க் கரைபாகு
வைத்திக்கு மாம்பழம் வாழைப் பழம்பலா
ஒத்திட்ட சாறுடன் உண்டிட்ட தன்மையின்
அத்திட்ட முள்ளதே அரியி னுமமே.

இர:—அப்படியா !—லீலாவதி, இவனுக்கு ஒருவேளை புத்திமாறி விட்டதோ ?

பிரக:—அண்ணு, அப்படி இல்லையே. அந்த ஆதிபரஞ் சோதி புகழை ஓதினதாலோ இப்படி சொல்கி றீர் ?

இர:—பார்த்தாயா, லீலாவதி உன் குமாரனை ? நியாய மும் எடுத்துச் சொல்கிறான் ! — இவனைப் பள் ளிக்கு அனுப்பி, இக்குணம் ஒழியுமாறு நாம் பழக்கவேண்டும்.

லீலா:—ஆம் ஆம், பிராணநாதா. அப்படித்தான் செய்ய வேண்டும்.

பிரக:—அம்மா, எனக்கு யார் பாடம் சொல்லிக்கொடுப் பார்கள் பள்ளியில் ?

லீலா:—ஏன், குலகுரு சுக்கிராசாரியர் இல்லையா?

பிரக:—அண்ணு, எனக்கு சுக்கிராசாரியார் நன்றாய்ப் பாடம் சொல்வாரா ?

இர:—கண்மணி, உனக்கு எல்லாப் புத்தியும் சரியாய் இருக்க, ஏனடா அந்த அற்பனைப் புகழ்ந்துபாடும் புத்திமாத்திரம் போகவில்லை?

லீலா:—எல்லாம் பள்ளியில் விட்டால் சரியாய்விடும் பிராணநாதா.

இர:—ஆனால், நாளையே இவனைப் பள்ளிக்கு அனுப்பு கிறேன். சுக்கிராசாரியர் ஊரில் இல்லை—இல்லா விட்டாலும், சண்டாமர்க்கர் இருக்கிறார்கள்— குழந்தாய், வா போவோம்.

[மூவரும் போகிறார்கள்.]

இரண்டாமங்கம் - இரண்டாங் காட்சி.

களம் : பள்ளிக்கூடம் - **காலம்** : முற்பகல்.

[பிள்ளைகள் எல்லாம் கீழே உட்கார்ந்து தங்கள் தங்கள் பாடங்களைப் படித்துக்கொண்டும் சட்டம் எழுதிக்கொண்டும் இருக்கின்றனர்.]

சண்டன்:—அடே, கனவலியா எங்கேயடா விரிச்சிகன் இன்னும் வரக்காணும்?

கனவல்லியன்:—வாத்தியாரே, அவங் ஆத்லே போயி, நண்டு பிடிக்க பூட்டாங். போம்போது என்னே கூட கூப்டாங். நான் சொன்னேங், நண்டுபிடிக்ற தாருந்தா வரமாட்டேங், வாத்தியாரு அடிப் பாரு ; மீனு பிடிக்றதாருந்தா, வர்ரேங் இன்னேங்.

அமர்க்கன்:—பேஷ் ! புத்திசாலி நீ. ஏனடா மீன் பிடிக்க மாத்திரம் போகலாமா?

கன:—அன்னிக்கி நீங்க பாடங் சொன்னபோது, நண்டு பிடிக்க கூடாதுன்னுதானே சொன்னீங்க?

அமர்:—ஆமாம், அதனால்?

கன:—அதோ அதோ வாத்தியாரே! விரிச்சிகனே அவங்கம்மா தூக்கிக்கினு வர்ராங்கோ.

[விரிச்சிகனே அவன் தாயார் எடுத்துக்கொண்டு வருகிறாள்.]

அம்மணி:—வாத்தியாரே, இன்னுபோங்க, நீங்க கேக்றதே இல்லியா! இன்னு? என்னேரமும் இவன் சொஷ்டே எனுக்கு போது மின்னுபோவுது.

சாப்பாடு போட்டா சாப்டமாட்டேங் இன்னும், பாடத்தே படிறுன்னு, படிக்கிறதே இல்லே. உம்.

அமர்:—முண்டை பெற்றதை எத்தனை அடி அடிக்கிறது? என் கைகூட நோகிறது.

அம்:—இன்னு! இன்னு! ஏங் வாத்தியாரே, ரொம்ப நீட்றிங்களே பேச்சே? ஓஹோ, இன்னு நெனச் சிக்கினிங்க, உங்க மனசிலே? முண்ட பெத்த தாமே. உம், நாக்கே உள்ளே வைச்சு பேசு; பத்திரங்.

அமர்:—அம்மணி! பேச்சு முறைமைக்கு அப்படி சொன்னேன். எனக்குத் தெரியாதா, உன் சமாசாரம்? நான் பார்த்துக்கொள்கிறேன்; நீ போ. கோபித்துக்கொள்ளாதே.

அம்:—பின்ன இன்னு வாத்தியாரே? நாளே மிக்கா னேத்திக்கி அப்படி சொல்லப் போறீங்க.

[போகிறுன்.]

அமர்:—அப்பா! இதில் குறைவில்லை.

சண்:—அடே விரிச்சிகா! இப்படிவா. நீ உன் பாடத்தைப் படித்தாயா?

விரிச்:—ஓ, ராத்திரியில்லாம் படிச்சேங், காத்தாலே கூட, இருட்டோட எயுந்து படிச்சேங்க.

சண்:—பாடம் வருமா?

விரிச்:—உம், உம், வருங்.

சண்:—எதோ ஒப்பி உன் பாடத்தை.

விரிச்:—(தன் மார்பையும் தலையையும் தடவிக்கொண்டு யோசனை செய்கிறான்.)

சண்:—இது தானு நீ படித்தது? (அடிக்கிறார்)

விரிச்:—இல்லிங்க, அடிக்காதிங்க, நான் சொல்றத்த கேளுங்களேங்.

சண்:—என்ன சொல்லப் போகிறாய், சொல்.

விரிச்:—காத்தாலே படிச்சேங். பாடங் நல்லா நல்லா வந்துது, அதுமேல, எங்கம்மா பயது போட்டாங்க. அத்த அந்த பாடத்துமேலே கப்புன்னு போட்டேன்னே, அதுபோய் தப்புன்னு இறுக்கிகிச்சி. அதாங் வெளியே வர்ல பாடம். வாத்தியாரே! வாத்தியாரே!! வந்துட்டுது! வந்துட்டுது!!

சண்:—என்னடா? வந்துட்டுது?

விரிச்:—பசிவந்துட்டுது, வூட்டுக்கு—

சண்:—மடையா! உன்னே வெளியே அனுப்பமாட்டேன், அப்படி போய் உட்கார். அடே பிரகலாதா! இப்படிவா, (பிரகலாதன் வர)—என்ன, நீ நான் சொல்லியபடி சொல்விவிட்டுப் பிள்ளைகளுடன் வீட்டுக்குப்போகப் போகிறாயா, அல்லது பட்டினியாய் இவ்விடத்தில் கிடக்கிறாயா?

பிரக:—ஐயா! தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படி செய்யுங்கள்.

சண்:—எங்கள் இஷ்டமாவது? சொல் இரணிய நமஃ—உம்.

பிரக:—('ஹரி! ஹரி!' என்று காதை மூடிக்கொண்டு) நாராயணய நமஃ

சண்:—அடே! அடே! நான் இவ்வளவு சொல்லியும் கேளாமல் ஒரே பிடிவாதமாகவா இருக்கிறாய்? இப்போது நீ சொல்கிறாயா, அல்லது உன்னை அடிக்கவா ?

பிரக:—ஐயா! எல்லாம் அறிந்த தங்களுக்கு நான் என்ன எடுத்துச் சொல்லப்போகிறேன்.

விருத்தம்.

கைத்திடும் கன்னலோர் புறமுறக் கண்டதைக்
காலினு லுதைத்துமே தள்ளி விட்டு
மெத்தவும் இன்னலைத் தந்திடும் வேம்பதை
விரும்பிடும் குணுளரைப் போலநீங்கள்
பத்தசம் ரக்ஷணன் பாதமே பற்றெனப்
பற்றிடா தெந்தையைப் பாவி நின்றீர்
இத்தினம் என்னையும் கேடுற எண்ணமே
ஏனுளம் கொண்டுளீர் இயம்பு வீரே.

வேறு.

பள்ளியில் வந்திடும் பால கர்க்கே
கள்ளமில் லாமலே கலைகள் பலவும்
உள்ளத் தமைத்திட உரைக்கு மென்றன்
வள்ளனீர் நியாயமோ வழுத்து வீரே.

ஐயா! அடியேனை கிருதார்த்த ஞக்காது, வீணே பாவத்துக் குள்ளாக்குகிறீரே!

அமர்:—அடே பாவி! உன்னுல் நாங்கள் எவ்வளவோ நன்மையை அடையலாம் என்று இருந்தோமே. துஷ்டா! தந்தையின் பெயரைச் சொல்ல மறுக்கும் தறிதலையே.

விருத்தம்.

"கெடுத்தொ ழிந்தனை யெம்மையும் உன்னையும் கெடுவாய்
படுத்தொ ழிந்தனை பாவியத் தேவரும் பகர்தற்
கடுத்த தன்றியே அயலொன்று பகர நின்னறிவின்
எடுத்த தென்னிது என்செய்த வண்ண நீ"—இன்றே.

பிரக:—ஐயா! கோபம் கொள்ளாதீர். நான் நன்மை யே செய்தேன். ஒருவரையும் கெடுத்தேன் அல்லேன்.

விருத்தம்.

"என்னை உய்வித்தேன் எந்தையை உய்வித்தேன் நினைய
உன்னை உய்வித்திவ் வுலகையு முய்விப்பா னமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்
என்னை குற்ற நானியம்பிய தியம்புதி"—ஐயா,

அமர்:—அடே! ஏது நீ அதிகமாய் பேசத் தெரிந்து கொண்டாய்? உனக்கு இந்நியாயங்களை எல்லாம் கற்றுக்கொடுத்தவன் யார்? பிரமாதி தேவர் களும், உன் பிதாவை வணங்கி வருவதை நீ அறி யாயா? எல்லா உலகங்களும் தெய்வம் என்று கொண்டாடும் உன் தந்தையின் பெயரைச் சொல் லடா என்றால், அதைவிட்டுத் தாறுமாறுகவா, உளறுகின்றாய்?

பிரக:—(தனக்குள்) ஆ! பரந்தாமா! பன்னகசயனா! புருஷோத்தமா? புண்டரீகாக்ஷா! எல்லாக் கலி களையும் ஐயம் அறக்கற்ற இவர்கள் ஏனோ இம் மாயையின் வயப்பட்டிருக்கிறார்கள்!—ஐயா, இச் சிறுவன் கூறுவதைக் கவனிக்க வேண்டும்; தயை செய்து.

விருத்தம்.

" ஆரைச் சொல்லுவ தந்தண ரருமறை யறிந்தோர்
ஓரச் சொல்லுவ தெப்பொருளுப மிடதங்கள்
தீரச் சொல்லுவ தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது பிரிதுமொன் றுளதோ "

விரிச்:—ஆமாம்பா ஆமாம். நீ வாத்தியாரு ; இவரு—

சண்:—அடே விரிச்சிகா, வாயை மூடு.

பிரக:—ஐயா, தாங்கள் என் தந்தையின் பெயரை எடுத்துச் சொல்ல வற்புறுத்துகிறீரே, அப்படி நான் அப்பெயரைச் சொல்வதால், எனக்கு என்ன சுகிர்தம் உண்டு. ஜகத்ரக்ஷகராம் அந்த ஸ்ரீநாரணருடைய திருநாமம் அன்றோ, நமக்கு உய்வைத் தருவது ?

விருத்தம்.

மண்ணி னின்றுமேல் மலாய னுலகுற வாழும்
எண்ணில் பூதங்க ணிற்பனதிரிவன இவற்றின்
உண்ணி றைந்துறை காரணத்தி னூங்குள உணர்வின்
எண்ணு கின்றதிவ் வெட்டெழுத் தேபிறி தில்லை.

ஐயா, அங்ஙனமாக, மோக்ஷஹேது அற்ற, சாரம் இல்லாத, இராக்ஷதன் ஒருவனுடைய பெயரை வாய்கூசாமல் போதிக்கவந்தீரே. இதுதானு நீங்கள் எனக்குப் போதிப்பது ?

விரிச்:—உம், அப்படி கேளு.

அமர்:—அடே பிரகலாதா, நீ இரணியநம: என்று சொல்கிறாயா, அல்லது அடிக்கட்டுமா ? இப்படி வா. சொல் இரணிய நம:

பிரக:—நாராயணய நம:

அமர்:—(அடித்து) இரணிய நமஃ

பிரக:—நாராயணய நமஃ

அமர்:—இரணிய நமஃ

பிரக:—நாராயணய நமஃ

அமர்:—அடே, இதுவரையில் உன்னை மஹாராஜாவின் குமாரனுயிற்றே என்று மெதுவாய் அடித்தேன். இப்போது உன் தேகத்தைப் பிளந்துவிடுகின்றேன் பார்.

பிரக:—ஐயா, தாங்கள் என்னை எப்படி அடித்தபோதிலும், அந்தப்பரந்தாமன் என் நெஞ்சிற் குடிகொண்டிருக்கும் வரையில் எனக்கு அந்த அடிகள் ஓர் உபத்திரவத்தையும் செய்யா. ஐயா! ஏனை வீண்மாயையின் வயத்தராய், உண்மைப்பொருளை மறந்தீர்! வேண்டாம், அவ்வரியைப் போற்றுங்கள். அதனுல், உங்கள் ஜன்மமே சாபல்யமாகும். கேவலமான இராக்ஷதனைப் போற்றுதீர்.

சண்:—அடே பிரகலாதா, நீ எங்களிடம் கற்றுப்போக வந்தாயா, அல்லது உன்னிடம் நாங்கள் கற்றுப் போக வந்தோமா?

விரிச்:—ஏங், சந்தேகமா ருக்குதா வாத்தியாருக்கு.

சண்.—அடே விரிச்சிகா, இப்படிவா (எழுந்து அவனை அடிக்கப்போக. அவன் பிரகலாதனிடம் ஓடி)

விரீச்:—பிரகலாதா, வாத்தியாரு அடிக்கிறாரு. அந்த அடி நோவாதிருக்க, இன்னமோ சொன்னியே அதன்னு? சொல்லு சொல்லு, அப்பப்பா நோவுதே சிக்கிரஞ் சொல்லுடா!

பிரக:—அப்பா, ஸ்ரீமந் நாராயண என்று சொல்.

விரிச்:—நாராயண ஸ்ரீமந் நாராயண (என்று பாடுகிறான்.)

[வாத்தியார் அடிக்கிறார். அவன் மேலும் பாடுகிறான். பிள்ளைகள் கைகொட்டிச்சிரிக்க, அவர்களையும் 'அடே அடே' என்று சண்டன் அடித்து அடக்க, அவர்களும் நாராயண, ஸ்ரீமந் நாராயண என்று பாடுகிறார்கள்.]

சண்:—தம்பி, இனி நாம் இந்தப் பிரகலாதனை இவ்விடம் வைப்பதே தகாது. இவன் ஒருவனால் மற்றைய பிள்ளைகள் எல்லாம் கெட்டுப்போகிறார்கள். வா, நாம் இது விஷயத்தை இரணிய பூபனிடம் தெரிவிப்போம்.

அமர்:—ஆம் அண்ண. அதுவே சரி.

[இருவரும் போகிறார்கள்.]

பிரக:—தோழர்காள், பார்த்தீர்களா அரிநாமத்தின் மஹிமையை! உங்களை உபாத்தியாயர் அடித்த போது, ஸ்ரீமந் நாராயணனை நினைத்ததால் அன்றே, உங்கள்மேற் பட்ட அவ்வடிகள், உங்களை உபத்திரவம் செய்யவில்லை?

விரிச்:—ஆமாங், ஆமாங். இது நல்ல தந்திரம்.

பிரக:—அப்பா, அம்மட்டுமோ அந்த அரிநாமத்தின் மகிமை! நீங்கள் எப்போதும், அவ்வரியை ஸ்தெளத்தியம் செய்துகொண்டு வருவீரானால், நீங்கள் என்ன என்ன வேண்டுகிறீரோ, அவை எல்லாம் சித்தியாகும். நீங்கள் எப்போதும் சந்

தோஷமாகவே இருப்பீர்கள். துன்பம் என்பது உங்களைக் கண்டதும் தூரத்தில் ஓடும். ஆதலால் தோழர்காள்! இன்று முதல், அரிநாம சங்கீர்த்தனம் செய்வதை விடாதீர்.

கன:—பிரகலாதா, உடவே மாட்டோங்.' அடே நல்ல ஒளவு தெரிஞ்சிருக்கிறுண்டா, பிரகலாதங்.

பிரக:—அப்படியானுல், நீங்கள் எல்லோரும் நான் பாடுவதுபோலவே பாடுங்கள்; அந்தப் பத்மநாபன் பாட்டை. என்ன சொல்கிறீர்; பாடுகிறீரா?

எல்லோரும்:—உம் உம்.

[பிரகலாதன் பாட . எல்லோரும் பாடுகின்றனர். சண்டாமர்க்கர் வருகிறார்கள். அவர்கள் மூன் பிள்ளைகள் எல்லாம் பாடுகிறார் கள்.]

சண்:—ஆஹா! அமர்க்கா, பார்த்தீனயா இவனை? இவன் கெட்டதும் அல்லாமல் எல்லோரையும் கெடுக்கப் பார்க்கிறுன். ஒருகால் தந்தையிடம் சொல்கிறேன் என்றுல் பயப்படுவான் என்று பார்த்தேன். இல்லை, இல்லை, உண்மையில் இவனை அவன் தந்தையிடம் அழைத்துக்கொண்டு போக வேண்டியதே! அடே பிரகலாதா, இப்போதாவது சொல்; இரணிய நம?.

பிரக:—நாராயணுய நம?

சண்:—அடே, பார் உன்னை என்ன செய்கிறேன். வா, நீ—அமர்க்கா, நீயும் வா.

[எல்லோரும் போகிறார்கள்.]

இரண்டாமங்கம் - மூன்றுங் காட்சி.

களம்: அரண்மனையில் ஓர் தாழ்வாரம் - **காலம்:** பிற்பகல்.

லீலா:—பிராணநாதா, என்ன இன்னும் பள்ளிக்குச் சென்ற நமது பாலன் வர இல்லையே ! ஐயோ ! அவன் பசியுடன் வருந்துவானே !

இர:—லீலாவதி, என்ன நேரமாய்விட்டது இப்போது? பள்ளிக்கூடம் விட்டால் அன்றோ, வருவான் அவன் ?

லீலா:—என்ன பிராணநாதா, சூரியன் உச்சிக்கு வந்து சாய்ந்தும் விட்டான். இன்னும் நேரமாக இல்லை என்கிறீரே ?

இர:—அப்படியா ! உம், வந்துவிடுவான்.

[சண்டாமர்க்கர் பிரகலாதனை அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.]

லீலா:—கண்ணு பிரகலாதா, வா. ஏன் அம்மா இவ்வளவு நேரம் ?

இர:—நயினா, பள்ளிக்கூடத்தில் என்ன என்ன பாடங்களைக் கற்றாய் ? சொல் கேட்போம்.

பிர:—அண்ணா, அகிலலோக காரணனும், ஆதிமத்தியாந்த ரஹிதனும், எல்லா உயிர்களையும் ரக்ஷிக்கும் தயாளுவாய் உள்ள தேவன் இன்னான் என்பதை உள்ளவாறு கற்றேன் நான்.

இர:—பேஷ் ! சண்டாமர்க்கர் நன்றாய் போதித்திருக்கிறார்கள் ! அதனாற்றான் இவன் என்னை இவ்வண்ணம் புகழ்ந்து சொல்கிறான். இவன் வாய்கொண்

டே அத்தேவன் யார் என்பதை அறிகிறேன்—பிரகலாதா! அத்தேவன் யார் தெரியுமா உனக்கு?

பிரக:—அண்ணு! அத்தேவனை அறியாதவரும் உண்டோ இவ்வுலகில்?

இர:—பேஷ்! பேஷ்! நான் சண்டாமர்க்கரை என்னவோ என்று நினைத்தேன்! சபாஷ்! அவர்கள் என்னுடைய மஹிமையை இவனுக்கு நன்றாய் போதித்திருக்கின்றனர். குழந்தாய் அத்தேவன் பெயர் என்ன சொல்.

பிரக:—அண்ணு! அந்த ஆதிதேவன் பெயரையா கேட்கின்றீர்?

விருத்தம்.

"காமம் யாவையும் தருவதும் அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்
நாமம் அன்னது வேறுமோ நாராய ணாய"

இர:—ஆ ஹா ஹா!—அடே பிரகலாதா!

விருத்தம்.

" அற்றை நாள்முதல் யானுள நாள்வரை யப்பேர்
சொற்ற வாயையும் கருதிய மனத்தையும் சுடுமென்
ஒற்றை யானை மற்றியாருனக் கிப்பெய ருரைத்தார்
கற்ற தாரொடு சொல்லுதி விரைந்தெனக் கின்றே"

அடே! சொல்; இதையார் உனக்குக் கற்றுக் கொடுத்தது?—ஏ சண்டாமர்க்கர்காள், இப்படி வாருங்கள் மடையர்களே! உங்களுக்கு நான் சொல்லிய தென்ன; நீங்கள் செய்த தென்ன? இதைக் கற்றுக் கொடுக்கும்படியாகவா, இவனை உங்களிடம் விட்டேன் நான்?

சண்:—(நடுக்கத்துடன்) பிரபு! நாங்கள் என்ன செய்வோம்!

இர:—மடையா! என்ன செய்வதாவது?

அமர்:—தேவா! எங்களால் ஆனவரையிலும் தங்கள் திருநாமத்தை முதலில் உச்சரிக்குமாறும், தாங்களே இவ்வுலகத்திற்குத் தெய்வம் என்றும் போதித்தோம். அதைப் பிரகலாதன் கேளாமல், யாரோ ஒருவனுடைய பெயரைச் சொல்கிறான். நாங்கள் அப்பெயரைச் சொல்லலாகாது என்று வற்புறுத்தியும், அவன் கேட்கவில்லை.

இர:—அப்படியா?

சண்:—ஆம்! பிரபு; நாங்கள் பயமுறுத்தியும் பார்த்தோம். அவன் எங்கள் சொல்லை எடுத்துக் கொள்ளவே இல்லை.

இர:—உண்மையா இது? ஆனால் இவனை என் எதிராக நிறுத்தி, போதியுங்கள்; பார்ப்போம்.

சண்:—பிரகலாதா! இப்படி வா, இப்போதாவது நான் சொல்வதுபோலச் சொல், இரணிய நமஃ

பிரக:—(செவிபொத்தி) நாராயண நமஃ

இர:—ஆ ஹா ஹா! அடே துஷ்டா! (பிரகலாதனை இழுத்து) என்முன் சிறிதும் அச்சம் இன்றியா அந்தத் துராத்மனுடைய பெயரைச் சொல்கிறாய்? அடே! உன் சிற்றப்பனைக் கொன்ற பாதகன் என்றறியாயா அந்த அரியை? ஆ ஹா, குலநாசகனுகிய உன்னை உயிருடன் வைப்பதே தகாது.

பிரக:—அண்ணு! கோபம் வேண்டாம். என்ன சொன்னீர்? என்னைக் கொல்லவா போகின்றீர்? அண்ணு! என்னைக் கொல்ல உம்மால் ஆகுமோ? ஆக்கவும் அழிக்கவும் வல்ல அந்தப்பரந்தாமனுக்கு அன்றி, எனையோருக்கு உண்டோ அந்தச் சக்தி? அண்ணு!

விருத்தம்.

மாதவர் மனத்துள் வாழும் மாதவன் எழுதியிட்ட
தீதக னெறிபோலாமே தினஉல கொழுக்க மெல்லாம்
ஆதலி னெந்தையும்மா லாவதொன் றில்லை அந்த
சீதரன் அசையின் யாவும் அசைச்திடும் செப்பினேனே.

இர:—அப்படியா!

விருத்தம்.

சீதரன் ஒருவன் எல்லாம் செய்திட வல்லான் என்றே
ஓதியென் புகழ்கெடுத்த துஷ்டனே உனையிப்போதே
வேதனைப் படவேயிங்கு வெட்டியே காட்டுகின்றேன்
பாதக குணத்தினனே பார்டா சமர்த்தை இன்றே.

[பிரகலாதனை இழுத்து, வாளை உயர்த்துகின்றான்.]

லீலா:—(தடுத்து) பிராணநாதா! பிராணநாதா! என்ன இது? ஊர்க்குருவியின்மேல் பிரமாஸ்திரமா? தங்கள கோபத்திற்கு இவன் எவ்வளவு?

சண்:—பிரபு! குழந்தை அவன். மன்னிக்கவேண்டும், தயை செய்து.

இர:—மடையர்களே! ஒழிந்து போங்கள்; நீங்கள் பாடம் சொல்லிப் பாழாய்ப் போனீர்.

சண்
அமர் }:—தங்கள் சித்தம். (போகிறார்கள்.)

இர:—லீலாவதி! நீயும் போ.

லீலா:—நாதா! கோபம் வேண்டாம்.

இர:—போ என்றால் போ, வீணே கோபத்தை மூட்டாதே; போ.

லீலா:—ஆ! (செல்கிறாள்)

இர:—அடே! இப்போதாவது அந்த அரியை மறந்து, என் பெயரைச் சொல்கிறாயா என்ன?

பிரக:—அண்ணா, தங்கள் பெயரைச்சொல்ல எனக் கோர் தடையும் இல்லை. அங்ஙனம் நான் தங்கள் பெயரைச் சொல்வதால், நான் அடையப் போகும் பயன் என்ன? கேவலமாம் இந்த உடலுக்குப் பயந்தோ நான் அக்கேசவனை மறக்க வேண்டும்? அண்ணா! சர்வதுக்க நிவர்த்தியும் பரமானந்தப் பிராப்தியும் அடையும் பொருட்டன்றோ இம்மாய வாழ்வை நாம் பெற்றது?

இர:—அடே பிரகலாதா! நீ அறியாமையால் இப்படி சொல்கிறாய். நான் சொல்வதைக் கேள். ஏன் வீணே என் கோபத்திற்கு ஆளாகிறாய்? நீ என் மகனாயிற்றே என்று, இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் பணிந்து என்னைப் போற்றுபவர் எல்லாம், இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் இன்புற்று வாழ்ந்து வருகிறார்கள். அடே! என்னைக் காட்டிலும் தெய்வம் என்று வேறு ஒருவன் இருக்கிறான் என்னும் எண்ணத்தை இன்றுடன் விட்டு விடு.

பிரக:—அண்ணா! அண்ணா! அப்படி சொல்லாதீர். தாம் எப்படி தெய்வம் ஆவீர்? தாம் செய்த

தவமகிமையால் அன்றோ இவ்வளவு மேன்மையை அடைந்தீர்? அண்ணு, அதை இதற்குள் மறந்து விட்டீரா? தம்மைப் பார்க்கிலும் மேலானவர் இல்லை என்றும் சொல்லலாமோ? தமக்கு இத் தகைய மேன்மையை அளித்தவர் யார்? அந்தப் பிரமன் அன்றோ? தாம் அந்தப் பிரமனே வேண்டி இப்பெரிய பதவியை அடைந்தீர். நானே அதனி லும்பெரும்பதவியை நாடினேன். அதன் பொருட் டே தமக்கு வரம் அளித்த அப்பிரமனே என்ற பரந்தாமனைப் பணிகிறேன். இதில் என்ன தவறு அண்ணு ?

இர:—அடே துஷ்டா! அந்த அரியா உனக்குப் பெரும் பதவியைக் கொடுப்பவன் ? எல்லோரும் எள்ளி நகையாடும் மலந்தின்னும் பன்றியாய் உரு எடுத்த அந்த மாயனு? அடே! அவனைப்பற்றி நீ என்ன அறிவாய்? அவனோர் அற்பன்; பயங்காளி. நான் சொல்வதைக் கவனி. அண்டமெண்டிசையும் கண்டவர் நடுங்க, அளவிலா ஆற்றல் பலவுமே பெற்ற வீரன் என எண்ணுவாய் என்னை. நீ பணிந்திடும் அந்த அரிமாத்திரம் அல்ல, அயன், அரன், இந்திரன் முதலானவர்களும் எனக்குப் பயந்து, நடுங்கி ஒடுங்கி இருக்கின்றனர். மேலும் என்னெதிரில் அத்துஷ்டனைத் துதித்தால், சத்தி யமாய் உன்னைக் கொல்வேன்.

பிரக:—அண்ணு ! தாம் என்னைக் கொல்வதற்காக வருந்தவில்லை. அப்படி தாம் என்னைக் கொல்ல எண்ணினும், நானும்மால் கொல்லப்பட்டவனு

கேன். எனினும், இத்தகைய பெரும் செல்வத்தை வகிக்கும் மார்க்கத்தை உணர்ந்த தாம் மாயவன் மலரடியைப் போற்றி, என்றும் மாயாத வாழ்வை அடையச் சற்றும் எண்ணவில்லையே என்று ஏங்குகின்றேன் நான்.

இர:—ஆ ஹா! நாஞ அந்த நாரணனை வணங்கவேண்டும்? அந்தப் பயங்காளிப் பயலை? அடே! இதை என் முன் சிறிதும் பயம் இன்றிச் சொல்லவந்தாய் அல்லவா? சீ துஷ்டா! இனி நீ எனக்குப் பிள்ளையல்ல – அடே! யார் அங்கே?

[இரண்டு சேவகர்கள் வருகிறார்கள். மற்றோர் புறம் லீலாவதியும் வருகிறாள்.]

அடே! இப்பாவியைக் கொலையாளிகளிடம் ஒப்புவித்து, இவனை மலையின்மேலிருந்து கீழே உருட்டச் சொல்லியதாக நான் உத்தரவிட்டேன் என்று சொல்லி, வீழ்த்தச் செய்யுங்கள். உம், நில்லாதீர்.

லீலா:—ஆ! (இரணியன் பாதத்தில் வீழ்ந்து) பிராணநாதா! பிராணநாதா! நன்மை தீமை இன்னது என்று அறியாத இளங்குழந்தை ஆயிற்றே! இவனைத் தாம் இப்படி செய்ய எண்ணங்கொள்ளலாமா? பிராணநாதா! பெற்ற மைந்தனுயிற்றே என்ற இரக்கமும் இல்லையா தங்களுக்கு!

இர:—பெற்ற மைந்தன்! பெற்ற மைந்தன்!—லீலாவதி பெற்ற மைந்தனு இவன்? பேசாதே நீ ஒன்றும். உன் நீலிக் கனத்தைக் காட்டாதே இங்கு-அடே என்ன இன்னும் நிற்கின்றீர்?

லீலா:—பிராணநாதா! ஒன்றும் அறியாப் பாலனுயிற் றே! குழந்தை அவனுக்கு என்ன தெரியும்:—

இர:—அவனுக்கா என்னதெரியும்? லீலாவதி! நீ என்ன சொல்லினுஞ் நான் கேளேன். என் கோபம் மூண்டெரிகிறது. நில்லாதே நீ இவ்விடத்தில்—அடே இவனை அழைத்தேகுமீரா, அல்லது கொல்லவா உங்களை?

லீலா:—பிராணநாதா! நான் சொல்லிப் பார்க்கிறேன். அதுவரையிலாவது, பொறுத்துக்கொள்ளுமே.

இர:—உனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா என்ன? அவனு உன் பேச்சைக் கேட்கப்போகிறான்? சரி, உன் இஷ்டம்—அடே! நிறுத்துங்கள் இவனை—லீலாவதி! நான் வருகிறேன், என்ன சொல்லப் போகிறான் கேள்; விரைவில்.

[போகிறான்.]

லீலா:—ஐயோ!—அப்பா பிரகலாதா!

பிரக:—அம்மா! தாம் எதற்காக வருந்துகிறீர்?

விருத்தம்.

பஞ்ச பூதத்தினு லானவிப் பாழுடல்
பாரினில் நசியுமென் றழுகிறீரோ
எஞ்சவே உற்றிடும் என்னுவி இன்றுடன்
இறந்துபோய் விடுமென அழுகிறிரோ
விஞ்சுபூ தங்கெடக் கண்டுமே வீணதாய்
விழுந்தழு வீரோநீர் வேறதாக
எஞ்சாத் தத்துறும் பூதங்க ளெப்படி
ஏற்றதாய் விடுமெதை எண்ணு வீரே.

800 009
175140

வேறு.

நித்திய மாமுயிர் நிலைத்த தம்மா
செத்தன ரென்பது சேர்பிரி வம்மா
உத்தம னடிமலர் உளங்கொ ளம்மா
இத்தனை வருத்தம் இராதினி யம்மா.

லீலா:—ஐயோ! கண்ணே உனக்கெப்படியடா இத் துணிவு வந்தது?

பிரக:—வேளைக்கு எல்லாம் வரும் அம்மணி.

லீலா:—ஐயோ கண்ணே! உன் தந்தைக்குப் பிரியமில் லாத காரியத்தை நீ செய்யலாமா?

பிரக:—அம்மா! அவர்தான் ஏதோபித்துக்கொண்டு இப்படி சொல்கிறார் என்றால் தாமுமா இப்படி சொல்கிறீர்? நன்றாயிருக்கிறது! உலகில், பெற் றோர் தம் பிள்ளைகள் நல்வழிப்படுவதையே பார்ப் பார்கள். அதைவிட்டுத் தாம் என்னை அல்வழிப் படுத்துகிறீரே.

லீலா:—அப்பா! நீ சொல்வது உண்மைதான். என் றாலும், உன் தந்தையின் கோபம் தணிவதற்கா வது அந்த நாராயணனைப் போற்றாமல் இருக்க லாகாதா!

பிரக:—அம்மா! என்ன கேள்வி இது! இதைவிடத் தாம் என்னை உன் தந்தையின் கோபத்தைத் தணிக்காவாவது, ஆலகால விஷத்தை உண்டு ஆவி இழக்கலாகாதா என்று கேட்டுவிடுமே.

லீலா:—அப்பா! கண்ணே! மைந்தா! அதோ வருகிற டா உன்தந்தை! இப்போதாவது சொல்லாயா!

பிரக:—வரட்டும்; அஞ்சாதீர் அம்மணி.

இர:—(வந்து) அப்படியா! மடையனே! வா என்னுடன். (பிரகலாதனை இழுத்துக்கொண்டு போகிறான்.)

[லீலாவதி 'பிராணநாதா' என்று அவன் பின் கதறிச் செல்கிறாள்.]

இரண்டாமங்கம் - நான்காங்காட்சி.

களம்: மலை - காலம்: பிற்பகல்.

[பிரகலாதனை இரண்டு கொலையாளிகள் மலைமேல் கொண்டு வருகிறார்கள்.]

காலபாசன்:—அப்பா! இப்போநாச்சங் செல்லிடு. உங்கப்பா பேரே செல்றத்துக்கு கூடவா, உனனுக்கு கஸ்டங்?

தந்தவக்கிரன்:—ஆமாங், நாங் கையிகாலே கட்டி, தோபத்தியா எவ்வளவோ பயமாக்குது கீயே, அங்க தள்ரத்துக்கு முன்னேசெல்லு. நாங்க போயி, மகாராஜாகிட்ட செல்லிடிரோம்.

பிரக:—அப்பா! நீங்கள் உங்கள் கட்டளையை நிறைவேற்றிச் செல்லுங்கள். ஏன் காலதாமதம் செய்கிறீர்? நான் அற்ப வாழ்வமைந்த இவ்வுடலைச் சதம் என எண்ணியோ, எம்பிரானை மறந்து, என் தந்தையின் பெயரைச் சொல்ல வேண்டும்?—ஸ்ரீ ஹரி! கோவிந்தா? முகுந்தா! உன் பாதமே

கதியென நான் பற்றியதுபோல, இந்த இராக்ஷதர்கள் என்று பற்றி ஈடேறப் போகின்றனர்.

கால:—ஏ! ஏ! போதும் நிறுத்து! நாங்க பாவம் போனு போவுது, இப்பனுச்சுங் செல்லின்னு, அந்தத் திருட்டு பயங்காளிப் பையங் பேரையா செல்ற? டே, தந்திவக்கிரா ஆவுட்டுண்டா.

தந்த:—இன்னு செல்றே, பிடிச்சி தள்ளப் போறேங்?

பிரக:—ஆ! பரந்தாமா!—அப்பா, நான் எம்பிரான் அடியை ஏத்தித்தொழும் அளவும் சிறிது பொறுங்கள்.

கோலியாளிகள்:—உம், ஆவுட்டுங்.

பிரக:—ஈசா! உன் இணையடியையே கதியெனக் கொண்டேன். எவ்வுயிர்க்கும் இன்பளித்துத் துன்பத்தைத் துடைக்கும் தெய்வமே! அன்று ஆதிமூலமே என்று கதறிய யானைமுன் ஓடி, அதன் இடர்தொலைத்த ஐயனே! நோவநினையான் நோவக்கண் பார்த்திடான், சாவநினையான், தளர விடான், என்று பக்தர்கள்பாடும் பரந்தாமா! கருணை மூர்த்தி! கருடவாகனு!

கோலியாளிகள்.—நேரமாவுது, ஆவுட்டுங் சிக்கிரங்.

பிரக:—(கைகூப்பி மௌனமா யிருக்கிறான்.)

[கோலியாளிகள் பிடித்துத் தள்ளிச் செல்கிறார்கள்.]

இரண்டாமங்கம் - ஐந்தாங்காட்சி.

களம் : வீதி - காலம் : மாலை.

பிரக:—(அரிபஜனை செய்துகொண்டே வருகிறான்.)

விரிச்:—(வந்து) பிரகலாதா! மலமேலிருந்து, தள்ளிட்டாங்க இன்னுங்களே!

பிரக:—அப்பா விரிச்சிகா! ஆம், என் தந்தையின் கட்டளைப்படி என்னைக் கொலையாளிகள் மலைமேலிருந்து உருட்டினார்கள்.

விரிச்:—ஐயோ! பொழச்சி வந்துட்டியே!

பிரக:—அப்பா! மாதவன் மலரடியை மனதிற்கொண்ட நான் பிழைத்துவந்ததும் ஓர் ஆச்சர்யமா? அப்பரம்பொருளைக் கதியெனப் பற்றினோர்க்கு ஓர் துன்பமும் நேரிடாதென்று சொல்லவில்லையா முன்னம் நான்?

விரிச்:—அப்பிடியன்னு சாவுகூட வர்ராதா?

பிரக:—சாதலும் பிறத்தலும் அற்ற தயாபரனை வணங்குவோர்க்குச் சாதலும் பிறத்தலும் எது?

விரிச்:—அப்பிடியா?

பிரக:—ஆம்—விரிச்சிகா, அஃதிருக்கட்டும்; நீ நான் சொல்லியதுபோல, அவ்விறைவனை வணங்கி வருகிறாயா?

விரிச்:—ஐயோ! நானு அன்னிக்கி நீ சொன்னியேநாராயணன்னு, அத்தே சொன்னேன்னு எங்கயுத்தே வெட்டப் பாத்தாங்களே. நான் அன்னிக்கே உட்டுட்டங்.

பிரக:—ஐயோ!—அப்பா, விரிச்சிகா, இதற்கா பயப்படுவது? இதோ என்னைப் பார்; என்னை அப்பெருமலையினின்றும் அவர்கள் தள்ளினர்களே, என்னுடம்பில் ஏதாவது காயம் ஏற்பட்டதா? அப்பா, வேண்டாம்—நீ ஒருவருக்கும் பயப்படாதே. நீ உள்ளவாறு நிரிகரண சுத்தியாய், அத்திருமகள் கேள்வனை வணங்கினால், உனக்கு ஓர் இடரும் வராது. உன்னை ஒருவராலும் கொல்லமுடியாது.

விரிச்:—அஃதிருக்கட்டுங், அப்பிடி நானு சொன்னு, நல்லா எனக்கு சோறு ஆப்டுமா?

பிரக:—கேவலம் சோற்றுக்கா இச்சைப்பட்டாய்?

விரிச்:—ஆ அ—சோறு மாத்திரமா கேட்டேங்? கொழும்பு—

பிரக:—அப்பா! நீ என்ன செய்வாய்! விரிச்சிகா! நீ விரும்பிய பொருள்கள் எல்லாம் கிடைக்கும். அரியை மறவாதே.

விரிச்:—இன்மோ நீசொல்றே எனக்கு பயமாருக்குது. அப்பாலே ஒதேதாங் கெடைக்குங். நாம் போறேம்பா. உங்கூடிருந்தாலே, என்னியும் இன்னுன்னு செய்வாங்க.

[போகிறான்.]

பிரக:—ஐயோ! ஏனோ இவனுக்கு இன்னும் எம்பெருமானின் மஹிமை விளங்கவில்லை.

[நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்.]

ஆ! அதோ யாரோ நம் பரந்தாமனைப் பாடி வருகின்றனர். ஆஹா! என்ன இனிமையாய்

இருக்கின்றது. மனமே, நன்றாய் உற்றுக்கேட் போம்.

(நாரதர் வெளிவருகிறார்)

பிரக:—ஐயா! நமஸ்காரம். தங்களைப்பார்த்தால் விஷ்ணு பக்தராகத் தோற்றுகின்றது. தாங்கள் யாவர்?

நார:—குழந்தாய்! உன் வாயால் என்னையும் பக்தன் என அழைத்தாயே அஃதும் என்பாக்கியமே. உன்னினும் பக்தர் உலகில் ஒருவர் உண்டோ? அப்பெரிய மலைக்கஞ்சாது, மாயன் ஒருவனையே மனத்திற் கொண்ட உன் திடம் யாருக்கு வரும்?

பிரக:—சுவாமி! இவை எல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும்? தாங்கள் யார் என்பதைத் தயைபுரிய வேண்டும். தங்கள் குரலோசையை எங்கேயோ கேட்டதுபோல், ஞாபகம் இருக்கிறது. தயை செய்யவேண்டும்.

நார:—குழந்தாய்! நான்தான் நாரதன்.

பிரக:—ஆ முனீந்திரா! (பணிகிறான்)

விருத்தம்.

ஆலிலை நாதனை எந்நாளும் பாடியே
ஆடியிசை கொண்ட நாதா
சீலமார் நான்முக னீன்றநற் சேயெனத்
திக்கெலாம் போற்று கீதா
கோலமார் அடியரின் குறைதனைத் தீர்த்திடுங்
கொள்கையே கொண்டிடும் பிரக்கியாதா
பாலனேன் இணையடி போற்றினேன்
பார்த்துமே பக்குமாய் ஏற்றருள் கானபோதா.

நார:—மங்கள முண்டாகுக! (எழுப்புகிறார்)

பிரக:—சுவாமி! அடியேன் இதுவரை தம்மை யாரோ என்று எண்ணி வார்த்தை பாடினேன். குரு தேவா! தங்கள் தரிசனத்தால், கிருதார்த்தன் ஆயினேன் நான். ஈதன்றோ நற்றினம் எனக்கு! இன்றன்றோ என் ஜன்மம் சாபல்யமாயது! சுவாமி, அடியேன் அனுபாசமாய்த் தங்கள் தரிசனத்தைப் பெற என்ன தவம் செய்தேனோ அறியேன். அத்தவம் இன்னதென அறிந்தால், ஆவியுள்ளவரை, அதனையே நான் செய்வேன்.

நார:—குழந்தாய்! உன் பெருமையை நீ அறியாது ஏதேதோ சொல்கிறாய். அப்பா! உன்னைக் கண்டது எனக்கு ஸ்ரீமந் நாராயணனைக் கண்டது போல அன்றோ இருக்கிறது! குழந்தாய், உன்னிடத்தில் இருக்கும் நிடவைராக்கியம் வேறு எவருக்கு வரும்? பக்தி பண்ணுதற்கு முதலில் வைராக்கியம் அத்தியாவஸ்யகமானது. அந்த வைராக்யமே உன்னிடத்தில் அளவுகடந்திருக்க, நீ எதில் குறைவு பட்டவன்?

பிரக:—குருசுவாமி, தாங்கள் இச்சிறியனை இங்ஙனம் புகழ்ந்து கூறலாமா? இதுவுமோ ஓர் வைராக்யம்? சுவாமி, உள்ளவாறு சமதமாதி குணங்களின் தத்துவத்தை அறிந்து, சர்வேஸ்வரன் தண்ணருட்கு இலக்காகும் பக்தர்கள் பாததூளிக்குச் சமானமாவது என்று என்று ஏங்கும் ஏழைக்கு உய்யுநெறி யருளாது, உயர்த்திக் கூறுகின்றீரே தேவரீர்.

நார:—அப்பா, உனக்கா நான் உய்யுநெறி காட்டவேண்டும்? இயற்கையிலேயே அந்நெறி உன்னிடம்

அமைந்திருக்கிறதே. ஆயினும், குழந்தாய், நீயே கேட்பதால், நான் சொல்கிறேன்; கேள். என்ன இடுக்கண் உனக்கு ஏற்பட்டபோதிலும் ஈசனே மறவாதே. அவர் எத்தகையதீங்கினின்றும்காக்கக் கடமைப்பட்டவர். காக்கும்பாரம் அவருடையது. அவரை எண்ணும் வேலை நம்முடையது. நீ எப் போதும் இறைவனிடத்தே அன்பு செலுத்து. ஒன்றைப்பெற நாடி வணங்காதே. உனக்கு என்ன வேண்டுமோ, அவற்றைத்தர அவன் கடமைப் பட்டவன். இந்த இந்த சமயத்தில், இவனுக்கு இன்ன இன்ன வேண்டுமென்பதை ஈசன் நன்றாய் அறிவான். அவனை வணங்கும்போது எனக்குஇன் னது வேண்டும் என்று கேட்பது அறியாமையா கும்; அவ்விறைவனைத் தாழ்வுபடுத்தியதுமாம். குழந்தாய், நானிப்போது சொல்லியதே, நிஷ்கா மிய பூசையாகும். இன்னும் என்ன சொல்வது உனக்கு?—ஆம்! அவ்வளவே. அரியை மற வாதே; அரியை மறவாதே; ஆவி அழிவதாயி னும்.

பிரக:—குருதேவா, குருதேவா! நல்ல சமயத்தில் நன் மொழி புகன்றீர். இவ்வுபதேசத்தைச் சிரசாகக் கொண்டேன்; என் கண்ணுக்கொண்டேன்; கருத்தில் என்றும் பொருத்தமாகத் திருத்திக் கொள்வேன். சுவாமி, தேவாமிருதத்திற்கொப் பான இவ்வுபதேசத்தை அருளிய தேவரீருக்கு யான் காணிக்கையாகத் தரக்கூடியது என்ன இரு கிறது? சுவாமி, ஒன்றும் காண்கிலேன்—ஆ, மறந்தேன். இதோ என் உடல் பொருள் ஆவி

மூன்றையும் ஈந்தேன். குரு சுவாமி, இனி எனக்கென ஒரு செயல் இல்லை. தற்போதம் ஒழியும் மார்க்கமும் உணர்ந்தேன். தன்னியனு னேன் தமியேன்.

நார:—அப்பா, நேரமாயது. உன் தாய் உன்னை எண்ணி அதிக துயரத்தோ டிருக்கிறாள். நீ விடைபெற் றுக்கொள்.

பிரக:—குருசுவாமி, விடைபெற்றுக் கொள்கிறேன். (பணிகிறான்.)

நார:—மங்களம் உண்டாகுக! சுகமாய்ப் போய்வரு வாய்,

பிரக:—சுவாமி, வருகிறேன். (செல்கிறான்.)

[நாரதர் பாடிச் செல்கிறார்.]

இரண்டா மங்கம் - ஆறாங்காட்சி.

களம்: - அறை - காலம்: - இரவு.

[லீலாவதி மிக்க துயருடன் கூடியவளாய் உட்கார்ந்திருக்கிறாள்.]

லீலா:—ஆ! கண்ணே! இதற்கோ உன்னை நான் மக னாய்ப்பெற்றேன்! அப்பா, பிரகலாதா! உன்னை மீட்டும் எப்போதடா காணப் போகிறேன்! கண்ணே! மைந்தா!

பிரக:—இதோ வந்துவிட்டேன் அம்மணி.

லீலா:—(அணைத்து) ஆ! குமாரா!

பிரக:—அம்மா, நான் அவ்வளவு சொல்லியும், அந்த அரியைச் சாமானியமானவர் என்று தானே எண்ணிவிட்டீர்? அம்மணி, தாம் ஏன் இப்படி வருந்த வேண்டும்? தங்களுக்கு என்மீது எவ்வளவு பக்ஷம் இருக்கிறதோ, அதைவிட அம்மாயனுக்கு அதிக பக்ஷம் இருக்கிறதென்பதை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

லீலா:—கண்ணே, நீ சொல்வதெல்லாம் உண்மையே. என்றாலும் என் பொருட்டாவது நீ நான் சொல்கிறபடி செய்யலாகாதா?

பிரக:—அம்மணி, என் மாயன் பெயரைச் சொல்ல வேண்டாம் என்பது தவிர, வேறெதையேனும் செய்யச் சொல்லுங்கள். நான் செய்யச் சித்தமாக இருக்கிறேன்.

லீலா:—அப்பா, அப்படி சொல்லாதே.

பிரக:—அம்மா, என் தந்தையின்பொருட்டு, என் உயிரைத் தரச்சொல்லினும் தருகிறேன். தாம் அம்மாயனை மறக்கும்படி மாத்திரம் சொல்லாதீர்.

லீலா:—அப்படியானால் உன் மனத்திலுள்ளேயே அப்பரந்தாமனைப் பணிதலாகாதா? ஏன் அதனை வெளிக்கு காட்டுகிறாய்?

பிரக:—அம்மணி திரிகரணங்களாலும் அன்றோ, தேவனைப் போற்றவேண்டும்?

லீலா:—கண்ணே, என் பொருட்டு நீ சிலகாலம் மானசமாகவே மாயனை வணங்கலாகாதா? பிறகு நீ பெரியவனானால், உன் இஷ்டம்போற் செய்யலாமே.

பிரக:—அம்மா, எதற்காகத் தாம் இப்படி சொல்கிறீர்? தாம் எதற்கும் அஞ்சவேண்டாம். மலையில் வீழ்ந்த என்னைக்காத்த அம்மாயை மறந்துவிட் டீரோ ; தம் மனத்துள்

[இரணியன் வருகிறான்.]

அண்ணா நமஸ்காரிக்கின்றேன்.

இர:—அடே இன்னுமா உயிருடன் இருக்கின்றாய் ? ஆஹா ! உன்னைக் கொல்லாமல்விட்ட அப்பாபி களை என்ன செய்கின்றேன் பார்.

பிரக:—அண்ணா, ஏன் வீணாக அவர்கள்மேல் கோபித் துக் கொள்கின்றீர் ? அவர்கள், தாம் கூறியது போலவே என்னை மலையினின்றும் தள்ளினர்.

இர:—பின் !

பிரக:—பின் என்ன ! பெற்ற என் தந்தை கைவிட்டா னும், உற்ற என் தந்தை கைவிடுவாரோ ?

இர:—அடே! ‘உற்ற உன் தந்தை யார் ?

பிரக:—அவரே உம்மையும் என்னையும் இவ்வுலகத்தை யும் அவ்வுலகத்தையும் படைத்து, அளித்துத் துடைப்பவர் அண்ணா.

இர:—அடே, உன்னை மலைமேலிருட்டியும் உன் மயக் கம் போகவில்லை அல்லவா ?

பிரக:—எப்படி போகும் அண்ணா அம்மயக்கம் ? அது என்னுடனே எனக்குள்ளே பிறந்ததாயிற்றே.

[சுக்கிராச்சாரி வருகிறார்.]

சுக்கிராசாரி:—இரணியேந்திரா! மங்களம் உண்டாகுக!

இர:—(எழுந்து) சுவாமி, நமஸ்காரம்.

சுக்:—அசுரேந்திரா! நீ உன் பிள்ளையை மலைமேல் உருட்டும்படியாகத் தூதுவர்களுக்குக் கட்டளை யிட்டதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மை தானு?

இர:—சுவாமி! உருட்டச் சொல்லியது உண்மையே. ஆனால், அவர்கள் நான் சொல்லியபடி செய்தார் களோ என்பது சந்தேகமாய் இருக்கிறது.

சுக்:—சந்தேகம் என்ன அதில்? மலைமேலிருந்து வீழ் ந்த குமரன், காயம் இன்றி வீடுசேர்ந்தான் என்று இந்நகரத்தில் உள்ளவர்கள் எல்லாம் சொல்கிறார் களே, அது உன் காதிற்படவில்லையா? அஃதி ருக்கட்டும். நானிது விஷயத்தைக் கேட்டதும், மிகவும் வியசனத்துடன் ஓடிவந்தேன். உன் அறியாத வயதுள்ள பாலனை அப்படியும் செய்ய லாமா நீ?

இர:—சுவாமி! அவன் சாகவில்லை என்றல்லவோ ஏங்கு கின்றேன் நான்!

சுக்:—ஆ! இவன் அப்படிப்பட்ட தவறென்ன செய் தான் என்று நீ இவனைக் கொல்லப் பார்த்தாய்?

இர:—தவறு வேறென்றும் வேண்டுமா! சுவாமி, குலத் துரோகிக்காகவா பரிந்துகூற வந்தீர்?

சுக்:—அசுரேந்திரா, எது ஒன்றையும் யோசித்துச் செய்யவேண்டும். ஒன்றும் அறியாப்பாலன் இவன். இவன்மீது நீ இத்துணைகோபம் காட்ட லாமா? நல்லது, நீ இவனை என்னுடன் அனுப்பு; நான் வழிப்படுத்துகின்றேன்.

இர:—சுவாமி, வேண்டாம்; அது தங்களால் ஆகாத காரியம். ஏன் வீணே சிரமம் எடுத்துக்கொள் கின்றீர்? கஷ்டம் இன்றி நானே முடித்து விடு வேன்.

சுக்:—பதறுதே அதிகமாய். நீ சற்று இவ்வறையை விட்டுப்போ.

இர:—சுவாமி, உங்களிஷ்டம். ஆனல், நான் இப்போது ஒன்று சொல்கிறேன். அவன் உங்கள் நல்லுப தேசத்தாலும் மனம் திரும்பானுயின், அவனே என் மல்லர்களேக்கொண்டு குத்திக் கொல்லும்படி செய்வேன். அதிலும் அவன் இறவாவிடின் கை யுங் கால்களேயும் சேர்த்துப் பெருங்கல்லொன்றில் இறுகக்கட்டிக் கருங்கடலதனிற் செருகவிடுவேன். இறுதி அதிலும் இசையாதென்னில், கறுத்த யானே செறுத்து மிதித்திட வறுத்துச் செய் வேன்.

சுக்:—(நகைத்து) அதிலும் இறவானுயின்?

இர:—எரிவாய் நாகத்திடமே விடுவேன்.

சுக்:—(நகைத்து) பைத்தியக்காரன் நீ. அசுரேந்திரா! உனக்கு ஏதேனும் புத்திமாறுட்டம் ஏற்பட் டதோ?

இர:—எனக்கா சுவாமி! உம், எனக்கா பைத்தியம் பிடித்துவிட்டதென்று சொல்கிறீர்? சுவாமி! இதோ நான் சொல்கிறேன்; சத்தியமாக. இவன் உங்கள் வார்த்தையையும் மீறி நடந்தால், கொன் றேன் அஃதுடன்.

சுக்:—சரி, இருக்கட்டும். நீ வெளியே போய் வா.

இர:—உம், தாமே பார்ப்பீர். (போகிறான்)

சுக்:—குழந்தாய் பிரகலாதா, இப்படி வா.

லீலா:—கண்ணே, நமது குலகுரு கூப்பிடுகிறார் போ.

சுக்:—(பிரகலாதன் அருகில்வர) அப்பா! உன் தந்தை சொல்லியதை எல்லாம் கேட்டாயா ?

பிரக:—சுவாமி, நன்றாய்க் கேட்டேன்.

சுக்:—இப்போது என்ன சொல்கிறாய் ?

பிரக:—சொல்வதென்ன சுவாமி ? மலையில் வீழ்ந்த அன்று என்னைக்காத்த அம்மாயன், மடிந்துவிட்டாரா என்ன ?

சுக்:—(தனக்குள்) ஆஹா, இவனுக்கு என்ன திடபக்தி உண்டாய் இருக்கிறது ! இவன் மனத்தைத் திருப்ப எவரால் ஆகும்—பிரகலாதா, நான் சொல்வதைக் கேள். உன் தந்தையோ மிகவும் கோபத்துடன் போயிருக்கிறான். நீ இப்படி சொல்லினால் அவனுக்கு மேலும் கோபம் அதிகரிக்கும். பின் பிரமாதமாய் முடியும். வேண்டாம், அந்த அரியை மறந்துவிடு.

பிரக:—ஆஹா, அப்படியே செய்கிறேன் ; அந்த அரியை மறக்க மற்றோர் கல் மனதைத் தாம் எனக்குத் தந்தால்.

சுக்:—மற்றோர் மனதை நான் தருவதாவது !

பிரக:—அரியை யான் மறப்பதாவது ?

சுக்:—பிரகலாதா, நீ உன் குலத்திற்கு அடுத்த ஒழுக் கத்தோடன்றே இருக்கவேண்டும்? அதைவிட்டு வேறொன்றைப் பற்றலாமோ?

பிரக:—ஓ, தாங்கள் எங்கள் குலகுரு என்பதை மறந் தேன். சுவாமி, என்ன சொன்னீர்?

சுக்:—இல்லை, உன் குல ஒழுக்கத்தை விடலாமா என் றேன்.

பிரக:—பேஷ்! சுவாமி போதும் உங்கள் போதனை. திருடன் பிள்ளை திருடிக்கொண்டே இருக்க வேண்டும்! அவன் தன் திருட்டுத்தொழிலைவிட்டு விட்டால், அவனைத் தாம் நீ ஏன் உன் குலத்தொ ழிலைவிட்டாய் என்று கேட்பீரோ?

லீலா:—அப்பா, வேண்டாம்; நமது குலகுரு சொல் வதுபோல செய்.

பிரக:—ஆம் அம்மணி. இவர் கிணற்றில் விழு என் றால் நான் விழவேண்டும்.

சுக்:—பிரகலாதா, இவ்வளவு நியாயங்களை எல்லாம் கற்ற நீ, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை ஏனப்பா மறந்தனை?

பிரக:—ஓ, இது நல்ல கேள்வியே! ஆம், நான் இதற்குப் பதிலும் சொல்லவேண்டியதே. சுவாமி, என் னைப்பெற்ற என் தந்தை—இரணியபூபதி—தங் கள் பிரிய சீடர்—ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்பதை ஏன் மறந்தார்?

சுக்:—அப்பா, அவனே தெய்வமாய் இருக்க அவன் ஏன் மற்றோர் தெய்வத்தை வணங்கவேண்டும்?

பிரக:—என் தந்தை தெய்வம் என்பதைத் தாமும் ஒப்புக்கொள்கிறீரோ?

சுக்:—அதற்கென்ன தடை?

பிரக:—ஆஞல், கருட கந்தர்வ, அசுர, யக்ஷராக்ஷச, பூத பிசாசங்கள் பிறப்பதும் இறப்பதும், மஹா சமுத்திரங்கள் வற்றிப்போவதும், பூமி முழுகிப் போவதும் நடைபெறுவதுமாகிய இவை எல்லாம் என் தந்தையின் செயல்தானே?

சுக்:—(தனக்குள்) சரி சரி, இவன் நம்மையே மருட்டுகிறான். ஏது, இவன் இராக்ஷத குலத்திற்கே, கோடாரியாய்த் தோன்றியுள்ளான்போலக் காண்கிறது—அப்பா! நீ இப்படி ஒரே பிடிவாதமாய் இருப்பது நல்லதல்ல. சொல், இரணிய நமஃ என்று

பிரக:—அதைத் தவிர?

இர:—(வந்து) சுவாமி! எதுவரையிலும் வந்திருக்கிறது?

சுக்:—உம், கழுத்துவரையிலும் வந்துவிட்டது. தலை ஒன்றுதான் பாக்கி.

இர:—ஆஹா! அப்படியா?—

விருத்தம்.

இட்மாய்ப் புத்திபல்வே றென்குல குருவும் சொல்ல
மட்டியே மனங்கோ ளாமல் மாயனைத் துதித்து நின்றாய்
அட்டியே செய்யா தின்னும் அரைக்ஷணத் திற்குள் உன்னை
வெட்டியே வீழ்த்து கின்றேன் வீணனே வருவாய் நீயே.

[பிரகலாதனை இழுத்துக்கொண்டு போகிறான்! அவன் பின் சுக்ராசாரியும், லீலாவதியும் 'ஆ! ஆ!' என்று கதறிச் செல்கிறார்கள்.]

மூன்றுமங்கம் - முதற்காட்சி.

களம் : கடல் - காலம் : இரவு.

[கொலையாளிகள் பிரகலாதனைக் கடற்கண் கொண்டு வருகிறார்கள்.]

காலபாசன்:—இப்போ நாச்சுங் சொல்லிடு.

பிரக:—அப்பா! உங்களுக்கேன் இந்தக் கவலை? அன்று மலையினிடத்தும், கூரியவாளுடன் என்னைக் கொல்லவந்த மல்லர்களிடத்தும் காத்த அக்கடவுள் என்றும் என்னைக் காப்பார். நீங்கள் உங்கள் வேலையைச் செய்து செல்லுங்கள்.

தந்த:—அப்போ நீ சொல்லமாட்டே?

பிரக:—ஆஹா! என்னைக் காக்கும் இறைவன் பெயரை எத்தனை முறை வேண்டுமானாலும் சொல்கிறேன். சொல்லட்டுமா?

கால:—உங்க அப்பா பேரே சொல்லுன்னு—

பிரக:—அது முடியாது.

கால:—ஆனு, நாங்க புடிச்சி தள்ளுவோங்.

பிரக:—தள்ளப் போகின்றீரா என்னை? இக்கடலுள்!—ஆ! இருஷிகேசா! பாற்கடல் துயிலும் பரந்தாமா! பாலன் உன் பாதமே கதி. (மௌனமாய் இருக்கிறான்)

[கொலையாளிகள் கடலில் தள்ளிச் செல்கிறார்கள். பிரகலாதன் கரைவந்து சேர்கிறான்.]

பிரக:—பரமதயாளு! உன் கருணையை யான் என்ன எனப்புகழ்வேன். எம்பெருமானே! எழையேனையும்—நாயினும் கடைப்போன நாயினேனையும்—ஓர் பொருளாய் எண்ணி, இடர்தொலைத்துக் காக்கும் பரமேசா! உன்னை நம்பினோர்க்கு ஒரு குறைவும் இல்லை என்பதை, என்று இவ்வுலகம் எல்லாம் உணரப்போகின்றனவோ அறியேனே!

[செல்கிறான்.]

மூன்றாமங்கம் - இரண்டாங் காட்சி.

களம்: அரண்மனையில் ஓர் அறை - காலம்: காலை.

இர:—அடே! நான் சொல்லியபடியே செய்தீர்களா?

கால:—அப்படியே, அப்படியே செய்தோம் பிரபு.

இர:—செத்தானு அவன்?

தந்த:—அவ்வள ஆயுத்திலே போட்டோமே பொயக்க முடியுமா? பாவங் பூட்டிருப்பாரு!

இர:—போகட்டும் சண்டாளன். அந்தப் பாவிக்காகவா ஐயோ என்றும் இரக்கம் பாராட்டுவது? குலத் துரோகி ஒழிந்தான்—

பிரக:—(ஓடிவந்து) ஒழியவில்லை அண்ணா! ஒழிய வில்லை அண்ணா! இதோ வந்தேன்.

இர:—ஆஹா! இதென்ன இது!—அடே காலபாசா! தந்தவக்கிரா! இவனைக் கடலிற்றள்ளி வந்ததாக என்னிடம் பொய்யா புகன்றீர்? என்ன, சொல்லுங்கள் உண்மையை?

பிரக:—அண்ணு ! அவர்கள்மேல் ஏன் கோபித்துக் கொள்கிறீர்? அவர்கள் என்ன செய்வார்கள்? பாவம்! தாம்சொல்லியபடி சமுத்திரத்தில் தள்ளி விட்டனர். நான் வந்துவிட்டேன்.

இர:—எப்படி பிழைத்து வந்தாய்?

பிரக:—இறைவன் காத்தான் என்னை.

இர:—யார் அவன் இறைவன்?

பிரக:—பாரையளிக்கும் பரந்தாமன்.

இர:—அடே! அடே! இன்னுமோ இருக்கிறான் அந்தப் பயங்காளி பரந்தாமன்?

பிரக:—என்றும் இருப்பவன் அவன்.

இர:—ஆ—பிரகலாதா! வேண்டாம்! வேண்டாம்! ஏன் மாளாத்துயருக்கு ஆளாகின்றாய்? என்னைத் தெய்வம் எனப்போற்று. என்னை நம்பு. நீ சுகப்படுவாய்.

பிரக:—ஆம்! அண்ணு! உம்மை நம்பினால் அலையிலும் மலையிலும் விட்டுத்தான் வேடிக்கை பார்ப்பீர். என் அப்பனை நம்பினால், அம்மலையிலும் அலையிலும் வந்து அணைத்து, என்னைக் காப்பார்; உண்மையே.

இர:—அடே! அவனு உன்னைக் காப்பவன்?

பிரக:—கேட்கவும் வேண்டுமா? பிரத்தியக்ஷம் அல்லவோ இது?

இர:—அடே! நீ இவ்வளவும் உன் சிறிய புத்திகொண்டு சொல்வதால் பொறுத்துக்கொள்கிறேன். நீ மல்

லர்களாலும், மலையாலும், அலையாலும் மாயாத காரணம் என்ன தெரியுமோ உனக்கு? மடையனே! சொல்கிறேன்கேள். நான் சாகாவரம்பெற்றவன்; தெரியுமா? நீ என் மகனுகலால், உன்னிடமும் என் தன்மை அமைந்திருக்கிறது. அதை விட்டு, ஏன் உண்மை அறியாமல், ஏதேதோ தெரிந்தவன்போல் பிதற்றுகிறாய்? சொல் இப்போதாவது, இரணிய நமஃ என்று.

பிரக:—(செவிபொத்தி) நாராயணாய நமஃ

இர:—இரணிய நமஃ

பிரக:—நாராயணாய நமஃ

இர:—இரணிய நமஃ

பிரக:—நாராயணாய நமஃ

இர:—ஆஹா! துராத்மா! என் எதிரில் அச்சமின்றியா எளனம் செய்கிறாய்? அடேபாதகா! உனக்கு இந்நியாயத்தையும்இத்துணிவையும்கற்றுக்கொடுத்த காதகன் எவன்? ஆஹா! சொல், இந்த க்ஷணமே என் கூரியவாளால், அவன் குடலைப் பிடுங்கி, கொத்தும் பருந்தும், கத்தும் நரியும், மெத்தப் பசியறச் சித்தக் களிப்புடன் வைத்திடுகிறேன் விருந்தாய். ஆஹா! ஹா! சொர்க்க, மத்திய, பாதாளமெல்லாம் தொழுதேத்தும் என்னை, என் வயிற்றிற் பிறந்தே, எனக்குத் துரோகம் செய்யும் பாதகனுகிய நீயோ என்னை அசட்டை செய்பவன்? மதியற்ற மடையனே, என்ன பேசாமல் இருக்கிறாய்?

பிரக:—அண்ணு தம்முன் நான் என்ன சொல்வது?

இர:—அடே! அப்படி கேள். இப்போதாவது இரணிய நமஃ என்று சொல். அந்த அரியை மறந்து விட்டு விடுகிறேன் உன்னை உயிருடன்.

பிரக:—சொல்லாவிடின்?

இர:—கொன்றெறிவேன்.

பிரக:—(நகத்து) அண்ணா! பஞ்சபூதத்தால் ஆனதன்றோ இந்த யாக்கை? இது என்றைக்காவது ஓர் நாள் இறந்தொழிய வேண்டியதே. அஃதும் ஈசன் ஆணைப்படி. அந்த ஈசன் கட்டளை, நான் இன்றே உம்மால் இறக்கவேண்டும் என்று இருந்தால் அதை யார் தடுப்பவர்?

இர:—நான் தடுப்பேன்.

பிரக:—அதுதான் தம்மால் ஆகாது.

இர:—ஆகாதா! அடே! ஆகாது ஆகும் என்பதையும் அறிந்தனையா? பார்க்கிறேன் இதோ. (இழுத்து) சொல் இரணிய நமஃ

பிரக:—நாராயணாய நமஃ

இர:—இரணிய நமஃ

பிரக:—நாராயணாய நமஃ

இர:—இரணிய நமஃ இரணிய நமஃ

பிரக:—நாராயணாய நமஃ நாராயணாய நமஃ

இர:—சீ துஷ்டா!—அடே காலபாசா! கொண்டுபோய் இந்தச் சண்டாளனைத் தடித்து மதத்துக்கொழுத்துப் பெருத்த யானையின் காலில் விடுத்துக்கொல்

ளுங்கள்—போ நில்லாதே பாதகா. (பிரகலாதனைத் தள்ளிச் செல்கிறான்.)

[பிரகலாதனைக் கொலையாளிகள் அழைத்தேகுகிறார்கள்.]

மூன்றுமங்கம் - மூன்றுங்காட்சி.

களம்: காடு - காலம்: முற்பகல்.

யானைப்பாகன்:—எங்கே இன்னும் வரலே? நானு எப்போ இருந்து காத்துக்குன்னு இருக்கிறேன். யானையைக் குத்தி குத்தி என் கையும் ஒஞ்சி போச்சி. நானு சீக்கிரம் வேலயே முடிச்சுக் குன்னு, குளுப்பாட்டனுமுன்னு வந்தாக்கா, இன்னுங் அவுங்க வரிலியே—அப்பா! எனக்கே பயமா இருக்குது யானே கிட்ட போவவே, இன்னு கோவமா இருக்குது—அதோ வாராங்கோ யாரோ.யாரது?—அவங்கதான், அவங்கதான்—

[பிரதலாதனைக் கொலையாளிகள் அழைத்து வருகிறார்கள்.]

ஐயா! நானு எப்போவோ வந்துட்டேன்.

கால:—யானே கோவமா பண்ணியா?

யா-பா:—அதோ பாருங்கோ.

கால:—அப்பா! பயமாருக்குதே!—பாத்தியா! இப்ப நாச்சுங் சொல்லு.

பிரக:—சொல்வதென்ன! நடத்துங்கள் உங்கள் வேலையை.

தந்த:—ஏ, மவுத்துக்காரா! ஆவுட்டுங்.

[பாகன் யானையை அவிழ்த்து விடுகிறான்.]

பிரக:—ஆ! கேசவா—ஓ! என்ன மருண்டேன்! ஏ யானையே! என்னைக் கொல்லவா வருகிறாய்? யான் யார் தெரியுமோ உனக்கு? அன்று மூலமே என்ற கரி முன்வந் திடர்தொலைத்து, நீலமேகம் போ னின்ற மாலின் பாலன் என எண்ணுவாய் என்னை.

[யானை திரும்பி ஓடுகிறது. பாகன் பின் போகிறான்.]

தந்த:—இன்னு மாயண்டாது!

கால:—உம், வா நாம் போயி சொல்வோம்:—பிரகலா தையா வாங்கோ.

[பிரகலாதனை அழைத்தேகுகின் றனர்.]

மூன்றுமங்கம் - நான்காங் காட்சி.

களம்: வீதி - காலம்: காலை.

[பாம்புப் பிடாரன் மோடி என்னும் வாத்தியக் கருவியுடன் வருகிறான்.]

பாம்புப் பிடாரன்:—அப்பா! ஓடியாறேங் ஓடியாறேங்; பாஷிங் வழி மாளளியே. இன்னிக்கி இன்னுத் துக்கு என்னே ராஜா வூட்டு சேவரு வந்து கூப் டாங்க? நல்ல கிராக்கிருக்கும்! அதுமுட்டுங் முயிச்ச வேலே நல்ல வேலே. எம் பொன்

டாட்டி காட்லே எரைக்க எரைக்க வந்துட் டாளே! உம். அவ வராபூட்டா நல்லாருந்த தையா ஒரு பாம்பு! அத்தே புடிச்சிருப்பங். உம், எதும் நம்ம அதிஷ்டங். எங்கே இந்தப் பக்கங் வந்தாங்களாமே அந்த சேவரு, காணே மே—இன்னுமோ நாலு அஞ்சிநாளாவே தன்னி பரிக்கே கூட இல்லே. இன்னிக்கி எப்பிடியோ, பாக்கலாங்.

[பிரகலாதனைக் கொலையாளிகள் அழைத்து வருகிறார்.]

ஐயா! கும்பிடுறேனுங்க. நானு நீங்க வந்திங் கன்னு காட்டிலேருந்து ஓட்டமா ஓடியாந்தங். இன்னு சமாச்சாரங்?

கால:—டே! நம்ம மாராஜா புள்ளே, மாராஜா பேரே சொல்லுன்னு சொல்லலே. அத்தாலே அவரு பாம்புங்களே வுட்டு கடிக்கவைச்சி சாவ வைக்க சென்னாரு.

பா-பி:—ஐயையோ! நம்ப மாராசா புள்ள யாச்சே!

தந்த:—நம்ப ராஜா உத்தாவு.

பா-பி:—ஆனுக்கா, நானு இன்னு செய்யுறது?

கால:—உங்கிட்ட இவரே சாவ வைக்கிற பாம்புங்க இருக்குதா?

பா-பி:—இன்னுசாமி! அப்பிடி கேக்கிறிங்களே? என்னே உங்களுக்கு தெரியாதா? தம்பனங், மோகனங், மாரணங்—

கால:—நிறுத்து, நிறுத்து, இவரே இட்டும் போயி, வேலே நடத்து. உனுக்கு நல்லா குடுப்பாங்க.

பா-பி:—அப்பிடியே, ஏழைங்க—வா ஐயா.

[பிரகலாதனை அழைத்துச் செல்கிறான், கொலையாளிகள் மற்றோர் புறமாய்ப்போகிறார்கள்.]

மூன்றுமங்கம் - ஐந்தாங் காட்சி.

களம் : காடு - காலம் : காலை.

[பிடாரன் பாம்பை ஏவுகிறான்.]

பா-பி:—ஐயா! தோபத்தியா பாம்பு? ரொம்ப ரொம்ப கோவமா சீறுது. சொல்லிடுங்க உங்க அப்பா பேரே.

பிரக:—அப்பா! உனக்கேன் இந்தக் கஷ்டம்? பேசாமல் என்னைக்கொன்று, அதனால் அதிக சன்மானம் பெற்றுப்போகிறது தானே?

பா-பி:—இன்னுமோ உங்களே பத்தா ஐயோன்னுருக்குது!

பிரக:—அப்படியா? ஆகட்டும், உன் வேலை.

பா-பி—இன்னமோ நானு சொல்லிட்டேங்—உஸ்! உஸ்!!

பிரக:—லக்ஷ்மி நாதா! கமலநயனா! கருடவாகனா!

விருத்தம்.

"மண்ணுளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாளவேண்டேன்
விண்ணுளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் திருவருளே வேண்டி நின்றேன்
புண்ணுளா நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்

கண்ணுளா சுடர்க்கமலக் கண்ணு என்னைக்
கைவிடிலென் செய்வேனே கடையனேனே."

[பாம்பைக் கருடன் தூக்கிக் கொண்டு போகிறான்.]

பா-பி:—ஐயையோ! என் பொன்னை பாம்புபோச்சே! போச்சே!

[பிடாரன் போகிறான். அவன் பின் பிரகலாதனும் செல்கிறான்.]

மூன்றாமங்கம் - ஆறாங்காட்சி.

களம்: வீதி - காலம்: பகல்.

[பிரகலாதனைக் கொலையாளிகள் அழைத்து வருகிறார்கள். பாம்புப் பிடாரன் அழுதுகொண்டே வருகிறான்.]

பா-பி:—ஐயா, எம்பொன்னை பாம்பு போயிடிச்சியா! போயிடிச்சியா! பாவிங்க உங்களாலேதானே இப்பிடியாச்சி. ஐயோ, எங் வயிறு எரியுதே, எரியுதே! நானு எம்பொண்டாட்டி மூருவி கேட்டா இன்னுன்னு சொல்ல போறேங்!

கால:—அடே, மாராஜாவிடம் போய்தாங் சொல்லி, நல்லா எனங் வாங்கினியே போதாதா?

பா-பி:—எனங் வந்துது. எம் பாம்பு வரலியேயா.

தந்:—பாம்பு பூட்டுத்துக்குதாங் எனங்.

கால:—போடா பேராசே.

பா-பி:—ஐயோ, உங்களுக்கின்னு தெரியுங் ஐயா நானு அத்தே வளத்தது! ஒரு பாலா, ஒரு முட்டையா-

ஐயோ! பாலு இல்லேன்னு காட்டிலே போயி மேய்றே பசுவே எல்லாங் திருடியாந்தனே! முட்ட இல்லேன்னு ஊரு கோயிங்களே எல்லாங் கொள்ளே இட்டேனே!

பிரக:—அப்பா, காலதாமதம் ஆகிறது; வாருங்கள்.

கால:—உங், இன்ன, தைர்யம்? கொஞ்சமுன்ன பய மில்லியே.

பிரக:—எதற்காக நான் பயப்படவேண்டும். வாருங்கள்; போவோம்.

[அவனைப் பின்பற்றி எல்லோரும் போகிறார்கள்.]

மூன்றுமங்கம் - ஏழாங்காட்சி

களம்: காடு - காலம்: பகல்.

[பிரகலாதனைக் கொலையாளிகள் அக்கினிக் குழியிடம் கொண்டுவந்து நிற்க வைக்கிறார்கள்.]

கால:—உம், பாத்தியா நெருப்பு?

தங்:—அத்லே யில்லாம் பொழச்சமென்னு பாக்காதே. இத்லே உழுந்தா அப்படியேதாங்.

கால:—இன்ன சொல்றே.

பிரக:—என்ன சொல்வது நான்?

தங்:—உங்க அப்பா பேரே சொல்லிடு.

பிரக:—எங்களப்பன் பெயரைத்தான் சொல்கிறேன்.

கால:—இன்ன உங்க அப்பா பேரு?

பிரக:—அப்பா, என் அப்பனுக்கு உள்ளது ஒரு பெயரன்றே. ஆயிரம் பெயருடையவனுயிற்றே அவன்.

தந்:—ஒரு பேரே சொல்லேங்.

பிரக:—ஒரு பெயரென்ன! சொல்கிறேன் கேள், கேசவன், முகுந்தன், கோவிந்தன்—

கால:—ஏவ, போதுங் போதுங்—ஆவுட்டுண்டா, தந்தவக்கிரா.

பிரக:—அப்பா, நீங்கள் என்னைப் பிடித்துத் தள்ள வேண்டியதில்லை. ஏன் உங்களுக்கு அவ்வளவு சிரமம்? யானே வீழ்கிறேன், இந்த நெருப்புள்.

கால:—ஆவுட்டுங், போ சிக்கிரம்.

பிரக:—அப்படியே. எல்லாச் சுடர்க்கும் ஒளிதரும் அப்பரஞ் சுடரே, பாவியேன் அகத்திருக்க, யான் பயப்படுவேனே, இத்தியிற்பாய?

விருத்தம்.

"மூவுல கங்களுமா யல்லனு யுகப்பாய் முனிவாய்ப்
பூவில்வாழ் மகளாய்த் தவ்வையாப் புகழாய்ப் பழியாய்த்
தேவர் மேவித் தொழுந்திரு விண்ணகர்ச் சேர்ந்த பிரான்
பாவியேன் மனத்தே யுறைகின்ற பரஞ் சுடரே".

[தீயில் வீழ்கிறான். கொலையாளிகள் போகிறார்கள்.]

மூன்றுமங்கம் - எட்டாங்காட்சி.

களம்: அரண்மனையில் ஓர் அறை - காலம்: பிற்பகல்.

[லீலாவதி துயருடன் இருக்கிறாள்.]

லீலா:—கண்ணே! கண்ணே! எவ்விதமானேயோ! 'அம்மா, அம்மா' என்று இப்பாவியை எண்ணி

ஏங்கினையோ! ஐயோ, சற்றேனும் உன் தந்தை, இரக்கம் என்பது இன்றி, கோர மல்லர்களைக் கொண்டும், கொடியபாம்பைக்கொண்டும், யானையைக்கொண்டும், உன்னைக் கொல்ல மனந் துணிந்தாரே! பிரகலாதா, நீ கடலினின்றும் பிழைத்தாய் என்பதைக் கேட்டுக் களிப்போடிருந்தேனே! ஐயோ, நீ எப்படியடா பாம்பின் வாயினின்றும் மீளப்போகிறாய்! மகனே! பரியயானையினின்றும் தப்பப்போகிறாய்! பாலா! பாலகா! ஐயையோ! உன்னை அக்கினிக் குழியிலும் போடப்போகிறதாய்ச்சொன்னார்களே! கண்ணே, நீ இதற்காகவோ இப்பாவி வயிற்றிற் பிறந்தாய்! பாலகா, பாவிநான் உன்னைப் பாம்புக்கும், நெருப்புக்கும் பலியிடவோ பிள்ளையாய்ப் பெற்றேன்! தங்கமுடி தரித்து நீ செங்கோல் கைக்கொள்வாய் என்று மகிழ்ந்தேனே! பிரகலாதா! என் செல்வமே! பெற்ற என்வயிறு பகிரென்குதே! கண்ணே! பாவி நான் செய்த கொடுமையோ இது! அப்பா!

[பிரகலாதன் ஓடிவருகிறான்.]

பிரக:—அம்மா, இதோ வந்துவிட்டேன்.

லீலா:—ஆ, மகனே! (அணைத்துக் கொள்ளுகிறாள்)

பிரக:—அம்மா, கண்டீரா என் அரியின் மகிமையை!

லீலா:—அப்பா. நீ எப்படி பிழைத்து வந்துவிட்டாய்!

பிரக:—அம்மணி, அதையுமா சொல்லவேண்டும்? எல்லோரையும் என்றும் காக்கும் இறைவன் என்னைக் காத்தார்.

[ஓணியன் வருகிறான்.]

அண்ணை, அக்கினிக் குழியில் அன்பாய் மூழ்கிய அடியேன் பணிகின்றேன்.

இர:—அடே! நீ தப்பிப் பிழைத்ததாக எண்ணிவிட்டாயா என்ன? சொல்கிறேன், கேள். இப்போதாவது அவ்வரியைமறந்து என்னைப்போற்று. இல்லாவிடின், இதோ இருக்கும் இவ்விஷத்தைப் பருகு.

லீலா:—ஆ! பிராண நாதா! நம்முடைய குழந்தையை நாமே கொல்வது நியாயமா!

இர:—லீலாவதி, என்ன சொல்லினை? நம்முடைய குழந்தையா இவன்! ஆ! நம்மைக் கொல்லவந்த நமன் என எண்ணுவாய் இவனை. இவனை நான் உயிருடன் விட்டேன் ஆயின், என்னுயிர் போய் விடும். பார், இவன் கெட்டதும் அன்றி, நமது ஊரில் உள்ள எல்லோரையும் கெடுத்து விட்டான். எல்லோரும் இவனைக் குரு என்றும், அந்த அரியே அருமைத் தெய்வம் என்றும் கொண்டாடுகின்றனர்.

லீலா:—பிராணநாதா, அவர்களை எல்லாம் அடக்கத் தம்மால் ஆகாதா?

இர:—லீலாவதி, உனக்கொன்றும் தெரியாது. நீ பேசாமல் இரு.

லீலா:—ஐயோ! (அழுது நிற்கின்றாள்.)

இர:—பேதாய்! இவனை நான் ஒன்றும் செய்யாமல் விட்டால் என்னை எல்லோரும் ஏளனம் செய்யார்களா; சிறு பிள்ளையைக் கொல்ல சக்தியற்ற

வன் என்று?—அடே, என்ன சொல்கின்றாய்? அரியை மறக்கின்றாயா, அல்லது இவ்விஷத்தைப் பருகுகின்றாயா?

பிரக:—அண்ணா, தாம் முதலிற் கூறியதற்காக வியசனப்பட்டேன். ஆனால், விஷத்தைப் பருகுமாறு சொன்னீரே, அதனால் அவ்வியசனம் நீங்கினேன். விஷமா அது? எதோ கொடும்.

இர:—அடே, இப்போதும் சொல்கின்றேன்; பிள்ளை என்றவாஞ்சையால். இது சாதாரண விஷம் அன்று. ஆலகால விஷத்திலும் கொடியது. இதை அஸ்வினி தேவர்களிடம் பெற்றேன். மிகவும் கொடியது.

பிரக:—அப்படியா! அவ்வளவு சக்தியுண்டா இதற்கு? கொடும் இப்படி. (வாங்கி நின்றான்)

லீலா:—(குடிக்கப் போனவனைத்தடுத்து) அப்பா; வேண்டாம்.

பிரக:—விடும் அம்மணி என்னை. அந்த பரந்தாமன் என்னைக் காக்கும் வேடிக்கையைக் கண்கொண்டு பாருமே, நேரில்.

[விஷத்தைக் குடிக்கும்போது, லீலாவதி 'ஆ மகனே' என்று மூர்ச்சையாகிறாள்.]

அம்மா, அம்மா! (உபசாரம் செய்கிறான்)

இர:—ஆஹா! இஃதென்ன ஆச்சர்யம்! எவ்வளவோ சோதனைகளைச் செய்து நானே கொண்டுவந்த இக்கொடுவிஷம், இவனைக்கொல்லாமல் விட்டதே!

பிரக:—அம்மணி, இதோ என்னைப் பாரும்; நான் இறக்க வில்லை அம்மணி.

லீலா—:ஆ! (எழுந்து) கண்மணி, விஷத்தைக் குடித்தா விட்டாய்?

பிரக:—ஒரு துளியும் விடாமல் குடித்தேன். வேண்டு மானால் கேளும் அண்ணாவை.

லீலா:—அப்பா! குடித்தாவிட்டனை? ஐயோ! கண்ணே, இப்போது எப்படி இருக்கிறது! மயக்கம் வரு கிறதா?

பிரக:—அம்மணி, பைத்தியமா உமக்கு? அன்று தாமீ ந்த, தனப்பால் உண்டதால் உண்டான பலத்தி னும் இப்போது ஆயிரமடங்கு பலம் அன்றே அதிகமாய் அடைந்தேன்; நான் இவ்விஷத்தை யுண்டு? அம்மா, இப்பலத்துடன் தான் உரத்துப் பாடவேண்டும், கருத்த மேனியனை?

[உரத்துப் பாடுகிறான்.]

இர:—ஆ ஆ, பாதகா! சற்றும் அச்சம் இன்றியா முற்ற வுங் கற்ற நற்றவன்போல என் எதிரில் பாடுகின் றாய்? வா, பார்க்கிறேன் உன்னை.

[கரம்பற்றி ஈர்த்துச் செல்கிறான்]

மூன்றுமங்கம் - ஒன்பதாங்காட்சி.

களம்: இரணியன் அரசவை - காலம்: மாலை.

[சபையில் எல்லோரும் உட்கார்ந்திருக்கின்றனர். இரணியன் பிரகலாதனை இழுத்துக்கொண்டு ஓடிவருகிறான். எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.]

இர:—வந்து நில் இப்படி, மடையா—ஆஹா! திரியகூடா திவமூர்த்தா, பார்த்தீரா இவன் கெர்வத்தை? இவன் சிறிதேனும் என் பேச்சைக் கேளாமல், எனக்குப் பயப்படாமல், என் எதிராகத் தன் மனம் போனபடி எல்லாம் பிதற்றுகிறான். ஆ! என் எதிரில் சற்றும் அச்சம் இன்றி, இன்னும் இறுமாந்து நிற்கிறான் பாருங்கள்.

பிரக:—அண்ணா, கோபம் என் கொள்கிறீர் என்மேல்? நான் என்ன தவறுசெய்தேன் என்று, இவ்வளவு கோபம் உண்டாயது தங்களுக்கு? நான் நல்வழிப் படத் தாம் பார்த்தலாகாதா? அண்ணா, பிறவியை ஒருவன் பெற்றது எதற்காக? பேரின்பத்தை அடையவேண்டி அல்லவா? ஒருவன் பேரின் பத்தை அடைய முயலாது, சிற்றின்பத்தையே பொருளெனக்கொண்டு வாழ்வானாயின், அவன் பிறவி பெற்றதனாலாம் பெரும்பயனை இழந்த மூடனாவனே அண்ணா!

இர:—அடே, மூடா! பேரின்பம் பேரின்பம் என்று கதறுகிறாயே, அப்பேரின்பமாவது தான் என்ன? அடே, என்னினும் பேரின்பத்தி லுள்ளவர் எவரேனும் உண்டென்று எண்ணுகிறாயா நீ? எல்லா

வற்றினும் குறைவுபடாது, எங்கும் எனக்கு மேம் பட்டவர் இல்லை என்று சொல்லும்படி வாழ்பவன் நான் ஒருவனே; இவ்வுலகில்.

பிரக:—அண்ணா, அப்படி சொல்லாதீர். தாம் சொல்வ தல்ல பேரின்பம் என்பது. இவை எல்லாம் எங் ஙனம் பேரின்பமாகும்? தாம் எவ்வெவற்றை நிலை யுள்ளன என எண்ணியுள்ளீரோ, அவை எல் லாம் ஓர் காலத்து அழிவனவே ஆகும். மேலும், முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவி லொரு பிடிசாம்பராகக் கண்டிருந்தும், தாம் இவ் வாழ்வை சதமென எண்ணி, இவ்வாழ்விற்கிடை த்த தாழ்ந்தபொருள்களே மேலாக எண்ணுகின் றீர்! இப்பொருள்கள் அல்ல, நாம் இறந்தபோது நமக்குத் துணையாய் வருபவை.

விருத்தம்.

"கொண்ட பெண்டீர் மக்க ளுற்றூர் சுற்றத் தவர்பிறரும்
கண்ட தோடு பட்டதல்லாற் காதன் மற்றி யாதுமில்லை
எண்டிசையுங் கீழ் மேலு மூற்றவும் உண்டபிரான் [யே.
தொண்டர் தோடுமாய் உய்யின் அல்லால் இல்லைகண்டீர்துணை

இர:—அடே துஷ்டா! என்ன சொல்லினை? ஆஹா! இராக்ஷதர்களே, கண்டீரா இக்காதகன் துடு க்கை?—அடே, நானு இறப்பவன்? அஞ்சா நெஞ் சப் பாவி, நானு ஓர் காலத்தில் இறப்பவன்? நான் அனுபவிக்கும் இன்பங்களா அழிந்து போகக்கூடியவை? அடே என்னினும் உயர்ந்த வன், இந்த ஈரேழு புவனங்களிலும் இல்லை என் பதை நீ அறியாது—

பிரக:—அண்ணு, அறிவேன் நன்றுய். தாம் எல்லோ ரையும் அடக்கி ஆள்வதால், உயர்ந்துவிட்டதாக எண்ணுகிறீர். அதற்கென்ன! யாவரும் வெறுத் துத் தள்ளிய திருட்டுத் தொழிலே மேற்கொண் டுள்ளசோரர்களுக்கும், கானகத்தே தனிவழிச் செல்லும் வீரரும் ஓர்கால் அடங்கி நடப்பதை நாம் கேட்டதில்லேயா? அன்றியும் உலகில் பலமற்ற வரைப்பலமுற்றவர்கள் அடக்கி ஆள்வது சகஜமே. அப்படியே தம்மையும் அடக்கத் தாணியில் எவ னேனும் ஒருவன் இருப்பான்.

இர—:ஆஹா! அடே பாதகா! என்னே இத்தாணியில் அடக்கி ஆள்பவனும் ஒருவன் இருக்கிறுனே? அடே, பூலோக, புவலோக, சுவலோக, ஜன லோக, தபோலோக, மஹாலோக, சத்தியலோக மென்னும் மேலேழுலகங்களிலும், அதல, விதல, சுதல, தராதல, ரஜாதல, மகாதல, பாதாள மென்னும் கீழேழுலகங்களிலும், இதுவரை என்னே அடக்கியாளத் திறமையில்லாத ஒரு வன், இனி அத்திறமை கொண்டு வருவான் என்றே பிதற்றுகிறுய்?

பிரக:—அண்ணு, க்ஷமிக்கவேண்டும் அடியேனே. இவ் வளவெல்லாம் தாம் கூறுவது, தம்மைப்பற்றி உந்தும் மாயையாலேயாம். கேவலமான அம்மா யைக்கு, சர்வேஸ்வரன் என்று எண்ணி இருக் கும் தாம் இடந்தாலாமோ?

இர—ஆஹா! என்னே மாயையின் வயப்பட்டவன் என்று கூறி என் முன் நிற்கிறுய் அன்றே? மடை யனே, இப்படிவா. (இழுத்து) சொல், இணிய நமீ

பிரக:—நாராயணாயநமஃ

இர:—இரணியநமஃ

பிரக:—நாராயணாயநமஃ

இர:—தூ! மடையனே! கேவலம் பன்றியாய் உரு மாறிய அப்பாதகனைப் போற்றும் பாவி:—

பிரக:—அண்ணு, அவர்மகிமை அறியாது தாம் இங்ஙனம் சொல்கிறீர். பன்றியானது, அப்பரமன் திரு விளையாடலுள் ஒன்றும். அவன்,

விருத்தம்.

"ஆணி லேடு பெண்ணுமாகி யல்லவோடு நல்லவாய்
ஊணி லேடோசை யூறுவாகி யொன்றலாத மாயையாய்ப்
பூணி பேணி மாயலுகிப் பொய்யிலேடு மெய்யுமாய்க்
காணி பேணு மாணியாய்க் கலந்து சென்ற கள்வனே."

இர:—காதகா! எனக்குப் பயந்து, இருக்கும் இடமாகிய வைகுண்டத்தையும் விட்டோடிப் போன அந்த வீணனையா என்முன் பரமன் எனச் சொல்லவந்தாய்?

பிரக—அண்ணு, அப்பரந் தாமனை அப்படி இகழாதீர். தாம் அவருடைய உண்மையான ஸ்வரூபத்தை அறியாததால், இங்ஙனம் பழிக்கிறீர். அவர், நித்திய, முத்த, பூரண, ஏக, பரமார்த்த, பரப்பிரஹ்ம, நிதான, சாந்த, சத்திய, கேவல, துரிய, சனாதன, சூக்ஷ்ம, விபுவாய் உள்ளவர் அண்ணு.

இர:—அடே, அப்படிப்பட்டவனு, நான் இந்தக்காலால் உதைத்துக் கசக்கிப் பிழிவேன் என்று பயந்து ஓடி ஒளித்துக் கொண்டான்?

பிரச:—அண்ணு, அண்ணு, அப்படி சொல்லாதீர். பெரும்பாவம் சூழும் தங்களே. அவரா, தங்கள் கைக்கு அகப்படுபவர்? அண்ணு, அவரை எவனும் அசைக்க முடியாது. எந்த ஆயுதமும் அவரிடம் செல்லாது.

இர:—அப்படியா! அவ்வளவு மாயை கற்றவனு அவன்?

பிரக:—அப்படி அல்ல அண்ணு. அவர் சொரூபத்தை உள்ளவாறு உரைக்கிறேன்; இன்னும் கேளும். அவர், அசல, அமிர்த, அப்பிரமேய, விமல, அசங்க, அதுல, அனுமய, அகோசர, நிர்க்குண, நிஷ்கள, நிரஞ்சன, நிரவயவ, அனந்த, அவிகார, அசரீர, அகண்டமா யுள்ளவர்.

இர:—அகண்டமாய் உள்ளவர்! அடே, அவனு அகண்டமாய் உள்ளவன்?

பிரக:—அண்ணு, அதைக் கேட்கவும் வேண்டுமோ?

இர:—எனக்குப் பயந்து ஓடிப்போன அவன்?

பிரக:—அண்ணு, மீட்டும் அப்படி சொல்லாதீர் அப்பரந்தாமனே. அவன் எங்கும் நிறைந்துள்ளவன் என்றேனே. அவன் ஓடவும் வேறு இடம் உண்டோ அண்ணு?

இர:—எங்கும் நிறைந்துள்ளவன்?

பிரக:—ஆம்.

விருத்தம்.

" உலகுதந் தானும் பல்வே றுயிர்கள்தந் தானும் உள்ளுற்
றுலவிலா உயிர்க டோறு மங்கங்கே யுறைகின் றானும்
மலரினில் வெறியும் எள்ளி லெண்ணெயும் மற்றுங்களாய்
அலகில்தொல் புகழும் பற்றி மூற்றிய அரிகாணத்தா."

இர:—ஆம்! அடே! அவன் பலம் கொண்டோ என்னை இத்தனைநாள் இகழ்ந்துவந்தாய்? அக்கொடியனு உனக்குத் துணையாய் இருந்து, நான் இட்ட தண்டனைகளினின்றும் உன்னைக் காத்தவன்? நல்லது, எங்கும் உள்ள அவனை எனக்குக் காட்டுவாய்.

பிரக:—அண்ணு, நான் காட்டுவதாவது! இதோ எங்கும் நிறைந்திருக்கிறார் அவர்.

இர:—அப்படியா!—எங்கே அவன்? காணுமே என் கண்முன்?

பிரக:—அண்ணு, அதற்கு நான் என் செய்வேன்?

இர:—என்ன செய்வதாவது! சற்றுமுன் எங்கும் உள்ளான் அந்த அரி என்றதை இந்தக்ஷணம் என் முன் ரூபிக்காயாயின், கொன்றெறிவேன் உன்னை.

பிரக:—என்ன இது! நான் தான் முன்னமே அவர் எங்கும் உள்ளார் எனக் கூறினேனே.

இர:—என் கண்ணிற்குப் புலப்படவில்லையே அக்கபடன்?

பிரக:—அண்ணு!

விருத்தம்.

"என்கணுளேக்கிக் காண்டற் கெங்கணும் உளன்காணெந்தை
உன்கணனன்பிற் சோற லுறுகோளென் றுணா கில்லாய்
நின்கணுளேக்கிக் காண்டற் கெளியனே னினக்குப்பின்னேன்
பொன்கணு ளுவி யுண்ட புண்டரீ கக்க ணம்மான்."

இர:—அப்படியா? ஆனல் உன்மாயன், அந்த அரி நான் தொட்டுக்காட்டும் இடங்கள் தோறும் இருப்பானு?

பிரக:—ஆஹா! அண்ணு,

விருத்தம்.

"முன்னிலும் இருப்பான் பின்னிலு மிருப்பான்
முதலெழுத் திடையினு மிருப்பான்
பொன்னிலு மிருப்பான் பொருளினு மிருப்பான்
பொருந்துமுச் சுடரினும் இருப்பான்
தன்னிலு மிருப்பான் தவத்தினு மிருப்பான்
தானவர் குலத்தில்வந் துதித்த
என்னிலு மிருப்பான் உன்னிலு மிருப்பான்
எவ்வுயிர் களிலும்வாழ் பவனே."

இர:—என்னிலும் இருப்பான்! ஆஹா!

விருத்தம்.

என்னிலும் உலகத்துள்ள எவ்வகைப் பொருளி னுள்ளும்
மன்னியவ் வரிதா னுள்ளான் மகிழவே என்று சொல்லும்
உன்னையோர் கூணத்திற் குள்ளே உயிர்க்கொலை செய்கின்
பன்னுவாய் அந்தமாயன் பகருமித் தூணுளானே? [றேன்பார்

பிரக:—அண்ணு! இது என்ன கேள்வி? எங்கும் நிறை ந்த இறைவன், இத்தூணில் இல்லாமலும் இருப் பனு?

விருத்தம்.

சேணிலு மிருப்பான் திசையினு மிருப்பான்
திரியுமுச் சுடரினு மிருப்பான்
ஆணினு மிருப்பான் பெண்ணினு மிருப்பான்
அவனியி லணுவினு மிருப்பான்
ஊணினு மிருப்பான் உரையினு மிருப்பான்
உரைத்த உம் முரைப்படி இத்தத்
தூணினு மிருப்பான் துரும்பினு மிருப்பான்
தொல்லைமூ லப்பரஞ் சோதி.

இர:—ஆ! இத்தத்தூணில்?

பிரக:—ஆம்.

இர:—ஆம்!—ஆ ஹா!

விருத்தம்

"தீட்டிய தூணிலும்தான் தெய்வமாம் மாயன் தன்னைக்
காட்டிலு லாச்சு நிப்போ காட்டாமற் போவா யானுல்
தாட்டிக புலிபோல்சீறி சகமதிர்ந் திடவே யுன்றன்
ஊட்டியைக் கடித்துப் பச்சை உதிரத்தைக் குடிப்பேன்பாராய்"

பிரக:—அண்ணு, தாம் என்ன என்னைக்கொல்வது? அப்படி அந்த மாயன் இத்தூணில் இல்லாவிடின், நானே என்னுயிரை மாய்த்துக் கொள்வேன்.

இர:—அப்படியா! பார்க்கிறேன் இதோ. (போய்த் தூணைக் குத்துகிறுன்.)

[தூணைப் பிளந்து கொண்டு நர சிம்மமூர்த்தி வெளிவருகிறுர்]

நரசிம்மமூர்த்தி:—ஆஹா! அடே இரணியா!

இர:—ஆ! பாதகா! அகப்பட்டனையா என்கையில்:—பிரகலாதா, நீயே என்மைந்தன். அப்பா, உன்னை மெச்சினேன். என்குலத்திற்கே பகைவனுகிய இப்பாவி அரியை என்முன் காட்டிய நீயே என் புத்திரன்.

நர:—அடே, வீண்பேச்சு ஏன்? வந்துநில் வீரனுல்.

இர:—ஆ! வந்தேன் இதோ (செல்கிறுன்)

பிரக:—(தடுத்து) தந்தையே, வேண்டாம். இப்போதாவது கோபந் தணிந்து, கோவிந்தன் குரை கழல் போற்றும்.

இர:—குழந்தாய், விலகுநில், இதோபார் ஒரு க்ஷணத்தில், இப்பூமியாதி யந்தமும் இடுகுடென்று நடு

ங்க, இவனைத்தூக்கி, உடலைத்தாக்கி, கண்டத்தை இறுக்கி, மண்டையைப் பிளந்து மாளச்செய் கிறேன்.

நர:—(நகைத்து) வாடா வா.

இர:—அடே, என்ன சொல்லினை? (அருகிற் செல்கி றான்)

[இருவருக்கும் போர் நடக்கிறது. இரணியன் குடலை நரசிங்க மூர்த்தி மாலையாக அணிந்து, இரத்தத்தைக் குடிக்கிறார். பிர ஹ்மா முதலானோர் வருகிறார் கள்.]

பிரம:—நாரதா, இஃதென்ன இது! இறைவன் கோர ஸ்வரூபத்தைக் காணவும் பயமாய் இருக்கிறது! நீ உன் வீணுகானத்திலாவது, அவரைச் சாந்தப் படுத்து.

நார:—இது என்னுல் முடியாது. இப்போதாவது என் வீணுகானம் பயன்படுவதாவது? ஏதோ சாந்த மாய் இருக்கும் சமயங்களிற்றான் என் வீணு கானம் செல்லும்—இதோ ஸ்ரீதேவி இருக்கிறார் கள்.

ஸ்ரீதேவி:—ஆஆ! நான் மாட்டேன். அருகே செல்ல வும் பயமாய் இருக்கிறது!

பிரக:—அம்மா, என் தந்தையிடம் செல்ல என்ன பயம்? இதோ யானே செல்கிறேன். (வணங்கித் துதிசெய்கிறான்.)

விருத்தம்.

"பல்லா யிரங்கோடி அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குளெனத் தோன்றுமா னின்னுழையே
எல்லா உருவமுமாய் நின்றக்கா லிவ்வுருவம்
வல்லே படைத்தால் வரம்பின்மை வாராதோ"

நர:—என் அன்பான குழந்தாய்! மங்களம் உண்டாகுக! உன்பக்திக்கு மெச்சினேன்; எழுந்து என் அருகில் வா—லக்ஷ்மி, இப்படி வா நீயும்.

[ஸ்ரீதேவியும் பிரகலாதனும் நரசிங்க மூர்த்தியிடம் செல்கிறார்கள்.]

பெண்ணே, இம் முடியை உன்மகனுக்குச் சூட்டுவாய்.

ஸ்ரீதேவி:—அப்படியே, பிராணநாதா— (முடி சூட்டுகிறாள்.)

நர:—குழந்தாய், நீ என்றும் சிரஞ்சீவியாய் வாழக் கடவாய்!

பிரக:—(பணிந்தெழுகின்றான்.)

[எல்லோரும் லக்ஷ்மி நரசிம்மனை ஸ்துதி செய்கிறார்கள்.]

மங்களம்.

125140

நாடகம் முற்றும்.